# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2022 ஜூலை**

**மலர்:43** **இதழ்:07**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.100**
**தனி இதழ் : ரூ.10**


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.


இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **ஏற்றந்தரும் மாற்றங்களை கையிலேந்தி ஆற்றுவோம் அளப்பரிய செயல்களை!**
   *தலைவர் மடல்* ........................4
2. **மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க ஊழியர் சந்திப்பு - ஏழு முனை பிரச்சார பயணம்.**
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து*..........................7
3. **பத்திரிகை மற்றும் வலைத்தள செய்திகளை அரசு ஊழியர்கள் முற்றிலும் நம்பலாமா?** ..............................*11*
4. **தனியார்மய ஷாக்கில் மின்சார வாரியம்!** ........................*14*
5. **ஊடக உலகில் உண்மையின் பேரொளி** ..................................*16*
6. **கழிசடைகள்** ...............................*17*
7. **எங்கள் வாழ்க்கை எவருக்கிங்கே புரியும்?**.....................*19*
8. **ஏழு முனை பிரச்சார இயக்கம்** ..........*20*
9. **எழு... எழு... எழுச்சியாய்** ................*28*
10. **முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் முன்னத்தி ஏர் தோழர் கு.சின்னப்ப பாரதி** .............*30*
11. **ஆகஸ்ட் 23ல் ஆர்ப்பரிப்போம் கோட்டையை நோக்கிப் பேரணிக்கு தயாராவோம் சொன்ன சொல் காக்க முதல்வரை நேரில் கேட்போம்!**.........*31*

தலைவர் மடல்

# ஏற்றந்தரும் மாற்றங்களை கையிலேந்தி ஆற்றுவோம் அளப்பரிய செயல்களை!

அன்னைத் தமிழில் திண்ணைப் பழமொழி ஒன்று சொல்வார்கள் “குடிக்கறது கூழு, கொப்பளிக்கறது பன்னீரு”. சுந்தரத் தெலுங்கில் மொழி தெரியாதவர்களுக்கும் புரியும் பழமொழியாக இருப்பது “பேரு பெத்த பேரு லோன ஏமி லேது”. இந்தப் பழமொழிகள் இரண்டும் இப்போதுள்ள அரசியல் சமூக பொருளாதாரச் சூழ்நிலைகளில் மற்றவர்களை விட அரசு ஊழியர்களுக்கு கன கச்சிதமாக பொருந்திப் போகும் பழமொழிகளாகும்.

இன்றிலிருந்து சுமார் முப்பது அல்லது முப்பந்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசு ஊழியர்கள் வாங்கிய மாதச் சம்பளம் சொற்பமானதாகவே இருந்தது. அதிகாரிகளுக்கான மாத ஊதியம் பத்தாயிரம் ரூபாய் என்பது அன்றைய நாளில் பெரிய சம்பளம். அடிப்படை ஊழியர்களுக்கு ஆயிரத்திற்குள்தான் அது இருக்கும். அந்த ஊதியத்தை கொண்டு அந்நாளில் அரசு ஊழியர்கள் டாம்பீக வாழ்க்கை வாழ முடியாவிட்டாலும் கௌரவமான வாழ்க்கை வாழ முடிந்தது. சமுதாயத்தில் அவர்களுக்கென்று தனி அந்தஸ்து இருந்தது. முப்பது வருடங்களுக்கு முன்பு வாங்கிய சம்பளத்தைவிட இப்போது அரசு ஊழியர்களுக்கு சுமார் 10 மடங்கு முதல் 15 மடங்கு வரை சம்பளம் உயர்ந்துள்ளது. அடிப்படை ஊழியரின் மாதச் சம்பளம் இப்போது ரூ.18000/-க்கு குறையாமல் உள்ளது. ஆனால் அன்று இருந்த கௌரவம், அந்தஸ்து, நிம்மதி எதுவும் இன்றைய அரசு ஊழியர்களிடம் இல்லை. காரணம் என்ன? பல காரணங்கள் இருந்தாலும் அவ்வப்போது ஏறிய விலைவாசிகளின் ஏற்றவிகிதத்திற்கு ஏற்றவாறு அரசு ஊழியர்களின் ஊதிய விகிதம் ஏற்றப்படாததும் மாற்றியமைக்கப்படாததும்தான் முதன்மையானது. அதனால்தான் அரசு ஊழியர்கள் நாளுக்கு நாள் வறுமையொத்த நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருந்தாலும் அவற்றையெல்லாம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் கௌரவமான வாழ்க்கையை கைவிட்டுவிடாமல் வாழ முயற்சித்து வருகிறார்கள். இந்திய விடுதலைக்குப் பின் இராணுவ வீரரர்களுக்கு அடுத்தபடியாக அரசு ஊழியர்கள் அரசின் பொக்கிஷங்களாகக் கருதப்பட்டனர். அரசின் திட்டங்களை செயல்படுத்துவதிலும் மக்களுக்கான சேவைகளை அரசின் திட்டங்களை கடைசி பொதுஜனம் வரை கொண்டு சேர்ப்பதிலும் அரசு ஊழியர்களின் பங்கு அன்றைய நாட்களில் முக்கியமானதாக இருந்ததால் அவர்கள் அரசாங்கத்தின் தூதுவர்களாக மக்களால் பார்க்கப்பட்டனர். ஊதியப் பிரச்னைகள் அந்நாட்களிலும் இருந்தாலும் அரசாங்கம் தங்களுடைய கோரிக்கைகளை செவிமெடுக்கும் என்ற நம்பிக்கை அன்றைய அரசு ஊழியர்களிடமும், ஊழியர் சங்க இயக்கங்களிடமும் இருந்தது. அன்றைய அரசுகளும் அரசு ஊழியர்களின் பிரச்னைகளை முற்றாக புறந்தள்ளி விடாமல் குறைந்தபட்சம் கூப்பிட்டுப் பேசி முடிந்தவரை சமாதானப்படுத்தும் நடவடிக்கைகளிலாவது ஈடுபட்டன. சில அரசுகள் ஊழியர்களின் சில பிரச்னைகளையேனும் தீர்த்து வைப்பதில் உண்மையான அக்கறை கொண்டிருந்தன. அதன்காரணமாகவே அரசு ஊழியர்களும் அரசு நம்மை கைவிட்டுவிடாது என்ற திடமான நம்பிக்கையில் அரசின் இரகசிய கோப்புகளைக் காப்பதிலும், அரசின் திட்டங்களை கடைசி பயனாளிவரை கொண்டு சேர்ப்பதிலும் சிரத்தையுடன் செயல்பட்டனர்.

காலங்கள் மாற மாற அரசியலில் ஊழல்கள் மலிந்து மக்கள் நலன் புறந்தள்ளப்பட்டன. அரசு ஊழியர்களின் பிரச்சினைகள் அலட்சியப்படுத்தப்பட்டன. தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டன. அரசு ஊழியர்கள் கடுமையான போராட்டங்கள் நடத்தி வேறு வழியில்லாமல் முக்கிய அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாலும், ஒப்புக்கொண்டதை செயல்படுத்தாமல்

விட்டுவிடுவது நவீன அரசியல் நாகரீகமாக மாறிவிட்டது. எதிர்கட்சியாக இருந்தபோது அரசு ஊழியர்களின் உரிமைகுறித்து எகிறிக்குதித்து நியாயம் பேசும் அரசியல் கட்சிகள், ஆளும்கட்சியானதும் அவற்றையெல்லாம் தம்முடைய பதவியேற்பு விழாவின் பட்டுக்கம்பளத்திற்குக் கீழே குழிதோண்டி புதைத்துவிடுவது நவீன அரசியல் சாணக்கியத்தனமாக மாறியுள்ளது.

அரசுத்துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் பெறுவது வரை அமைச்சுப் பணியையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள அறிவியல் ரீதியான அளவீடுகளின் அடிப்படையில் அமைச்சுப் பணிப்பிரிவின் கீழ் புதிய பணியிடங்கள் உருவாகக்கப்படாததாலும், ஓய்வு, பணித்துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வுகளால் காலியான பணியிடங்கள் நிரப்பப்படாததாலும், அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப் பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்துகொண்டு அல்லல்பட்டு வருகின்றனர். சட்டப்படி தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை தராமல் நிறுத்திவிட்ட நிகழ்வுகளாலும் ஆட்குறைப்பு, பணியிடக்குறைப்பு, வேலைப்பளு அதிகரிப்பு போன்ற காரணங்களினாலும் அரசு ஊழியர்கள் போராட்ட களத்திற்கு உந்தப்பட்டுள்ளனர் என்பதே சாசுவதமான உண்மை.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடிய போராட்டங்களில் பிரம்மாண்டமானது 22.6.1988ஆம் தேதியிலிருந்து 31 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம். அன்றைய தேதியில் பணியில் இருந்த அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ அவ்வளவு சீக்கிரம் மறந்து விட முடியாது. 8 லட்சம் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த 31 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் விளைவாக மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஒருமாத ஊதியம் போனஸ் ஆகியவற்றைத் தர தமிழக அரசை ஒப்புக்கொள்ள வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டம். மறக்கமுடியாத இன்னொரு போராட்டம் 2003ல் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் மீண்டும் ஒன்றுகூடி நடத்திய காலவரையற்ற போராட்டம். அரசு ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் எஸ்மா, டெஸ்மா உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களும் பாயும் என்று சொன்ன அன்றைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் மிரட்டலுக்கு பயப்படாமல் அவரின் அரசை எதிர்த்து நின்று போராடிய போராட்டம். கோபமுற்ற ஜெயலலிதா ஒரே அரசாணையில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் பேரை டிஸ்மிஸ் செய்தபோதும் மனம் தளராமல் நின்று போட்ட அரசாணையை திரும்பப்பெற வைத்த போராட்டம்.

அதன்பிறகு செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தை, மக்கள் சந்திப்பு பிரச்சாரம், வாகனப் பிரச்சாரம், மாவட்டம்தோறும் பிரச்சாரம் என பலகட்ட இயக்கங்களை நடத்தி அடுத்த தேர்தலில் அவர் தோற்றுப் போகதொண்டாற்றி ‘பகை முடிக்கும் பணி முடித்த போராட்டம். 2011ல் தேர்தல் அறிக்கையில் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்பட்டு பழைய பென்சன் தொடர வழிவகை காணப்படும் என்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம்.சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததன்பேரில் அவருக்காக வாக்களித்து நாலரை வருடங்கள் காத்திருந்த அரசு ஊழியர்களின் பொறுமை கைமீறியதால் காலவரையற்ற போராட்டத்தை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்து நாட்கள் காலவரையற்ற போராட்டம் நடத்திய பின்பு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை செல்வி ஜெயலலிதாவின் அரசு வெளியிட்டது. செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்புகளில் முக்கிய அறிவிப்புகளான காலமுறை ஊதியம் ஒழிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும், புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற்று பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடருவதற்காக சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு வல்லுநர் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் அந்தப் போராட்டத்தை திரும்பப் பெறவைத்தது. அதன்பிறகு

ஜெயலலிதா அம்மையார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட நிலையில் ஆட்சிப்பொறுப்பேற்ற எடப்பாடி பழனிச்சாமி அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காததால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தேர்தல் களத்தையே போராட்டகளமாக மாற்றி அதிமுக அரசை வீட்டுக்கு அனுப்பிய வரலாறுதான் கடந்த வருடம் நடந்தேறியது.

சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நம்முடைய கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை உள்வாங்கிக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டக் களங்களுக்கே நேரடியாக வந்து அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்ததோடு அவர்கள் நடத்திய மாநாட்டிலும் கலந்துகொண்டு அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் பிரச்சாரங்களும் செய்து திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியப் பங்காற்றினர். ஆனால் முதல்வராகி ஒன்றரை ஆண்டுகள் நெருங்கும் நிலையிலும் அவர், தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிபடி அரசு ஊழியர்களின் கோரிக்கைளில் ஒன்றைக்கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு, அவற்றை செயல்படுத்த முடியாது என்பதை தன்னுடைய அமைச்சர் மூலமாக சட்டமன்றத்திலேயே நாசூக்காக தெரிவிக்க ஆரம்பித்திருப்பதன் மூலம் அரசு ஊழியர்கள் அவர் மீதும் திமுக ஆட்சியின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை சுக்குநூறாக்கியிருக்கிறார். இதன்மூலம் ஆள்வது திமுகவாக இருந்தாலும் அதிமுகவாக இருந்தாலும் அவர்கள் யாரும் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை கொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார்கள் என்பதும் அரசு ஊழியர்கள் அவர்தம் குடும்பத்தினரின் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளைச் சொல்கிறார்கள் என்பதையும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

இப்படி அதிமுக, திமுக என மாறி மாறி கட்சிகளை ஆதரித்து ஏமாற்றமடைந்த வரலாறாகத்தான் அரசு ஊழியர் உரிமை மீட்புகள் உள்ளன. கடந்த 19 ஆண்டுகளில் நாம் ஆதரித்த அரசுகளே ஆட்சியை பிடித்துள்ளன. ஆனால் ஆட்சிக்கு வந்த எந்த கட்சியும் தேர்தலுக்கு முன் அளித்த வாக்குறுதிகளில் 5 சதவீதத்தைக் கூட நிறைவேற்றவில்லை. நமக்களித்த வாக்குறுதிகளை நாம் கேட்டும் அவர்கள் தர மறுப்பதிலிருந்து இனிமேலும் அவர்கள் தருவார்கள் என காத்திருப்பது வீணேயாகும் என்பதை நாம் உணர வேண்டும். இனி ஒரு புதிய சிந்தனையோடு நம்முடைய எதிர்காலத்தை கட்டமைக்க வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது. அதை தீர்மானிக்கும் சக்தியாக நம்முடைய ஊழியர் பிரச்சார இயக்கங்களும் கோட்டை நோக்கிய பேரணியும், மாவட்ட அளவில் நடைபெற்ற கருத்தரங்கங்களும் புதிய திசை நோக்கி நகர்ந்து வருகின்றன. மாற்றம் ஒன்றே மாறாதது என்ற நிதர்சனத்தை மனதில் ஏற்றி, ஆற்றுவோம் அளப்பரிய காரியங்களை. ●

## சூடா ஒரு கோப்பை சூப்

**இந்தியா இனி யாருக்கு?**

விமானங்கள் தனியாருக்கு
ரயில்வே தனியாருக்கு
வங்கிகள் தனியாருக்கு
எல்ஐசி தனியாருக்கு
மீன்கடல் தனியாருக்கு
நிலக்கரி சுரங்கங்கள்
முழுக்கவும் தனியாருக்கு
ஒப்பந்தம் பேசி இன்று
முப்படையும் தனியாருக்கு

இன்னுயிர் ஈந்து பெற்ற
இந்தியா இனி யாருக்கு?

- வல்லம் தாஜுபால்



# ஊழியர்களை நோக்கி - அரசு ஊழியர் சங்கம் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க ஊழியர் சந்திப்பு - ஏழு முனை பிரச்சார பயணம்.

*அரசு ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், விடிவெள்ளியாய் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 1984 ஆம் ஆண்டு மே 6 ஆம் நாள் துவங்கப்பட்டு, அன்றைய காலகட்டத்தில் தமிழக மக்களின் பேராதரவுடன் ஆட்சி பொறுப்பில் இருந்த எம்.ஜி.ஆர். ஆட்சியில் அரசு ஊழியர்கள் என்றாலே தி.மு.க. சார்புடையவர்கள் தான் என்ற தவறான கருத்து பரவலாக இருந்தது. ஆகவே அன்றைய ஆட்சி காலத்தில் அரசு ஊழியர் அமைப்புகள் போராடுவதற்கே தயக்கம் காட்டியது. அப்போதுதான் இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே மிக குறைந்த ஊதியம் பெற்று வந்த தமிழக அரசு ஊழியர்களின் உள்ளக் குமுறலை உணர்ந்து போர் குணமிக்க ஊழியர் நலன் சார்ந்த உழைப்பாளி மக்களின் உரிமை காக்கும் போராட்டங்களில் அரசு ஊழியர்களும் பங்கு பெறுவது அவசியமாகும் என்ற புரிதலோடும், குறிக்கோளோடும் உருவானது தான் அரசு ஊழியர் சங்கம்.*

*தமிழக அரசு ஊழியர்களின் அமைப்புகளிலேயே அதிக அளவில் உறுப்பினர்களை கொண்டுள்ள மிகப்பெரிய அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மட்டும்தான் என்பதை தமிழக அரசு ஊழியர்கள் நன்கறிவார்கள் சில சங்கங்களைப் போல் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட தொகையை இணைப்பு கட்டணமாக பெற்றுக் கொண்டதாலேயே அத்துறையில் உள்ள அனைவரும் நமது சங்க உறுப்பினர்கள் என கணக்கு காட்டுவது போன்றல்லாமல் ஆண்டு தோறும் ஒவ்வொரு ஊழியரையும் நேரில் சந்தித்து அவரது சம்மதத்துடன் உறுப்பினராக்குவது அரசு ஊழியர் சங்கம் மட்டுமே. ஒவ்வொரு ஊழியர்களிடத்திலும் நேரிடையாக தொடர்பு கொண்டு உப்பினர் சேர்க்கை, வரவு-செலவு கணக்குகளுக்கு ஊழியர்களிடம் ஒப்புதல் பெறுதல், நிர்வாகிகள் கூட்டம், வட்ட, மாவட்ட, மாநில செயற்குழு கூட்டம் ஆண்டுதோறும் பேரவை, மூனறாண்டுகளுக்கு ஒரு முறை மாநாடு என ஜனநாயகப் பூர்வமான நடவடிக்கைகளை கொண்டு இயங்கி வருவதால் அரசு ஊழியர்களின் அங்கீகாரத்துடன் ஏகோபித்த ஆதரவுடன் செயல்பட்டு வருகிறது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.*

*ஊழியர்களுக்கும், மக்களின் நலன்களுக்கு எதிராக எந்த ஆட்சியாளர்கள் இருந்தாலும், ஆளும் ஆட்சியாளர்களுக்கு தலையசைக்கும் வழக்கமோ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு கிடையாது என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டும். ஊழியர்களுக்கு விரோதமான நடவடிக்கையோ அல்லது ஆணைகளையோ அரசு வெளியிடும்போது துணிவுடன் சமரசமற்ற முறையில் களத்தில் இறங்கி போராடுவதும் ஊழியர்கள் மற்றும் மக்கள் நலனுக்கு ஆதரவாக செயல்பட்டால் வரவேற்பதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான். இந்நிலையில் திமுக தலைவர் தேர்தல் காலத்தில், கடந்த அ.தி.மு.க. அரசிடம் போராடுகின்றபோது போராட்ட களத்திற்கு வந்து அ.தி.மு.க. அரசு உங்களுடைய கோரிக்கைகளை தீர்த்து*



வைக்காது. எனவே போராட்டத்தை விலக்கிக் கொள்ளுங்கள் கழக அரசு அமைந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை விதைகளை விதைத்ததை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மறக்கவில்லை. எனவே கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டில் கோரிக்கை மனு கொடுத்தோம். எங்களது பிரதான கோரிக்கைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. ஆனால் தேர்தல் கால வாக்குறுதிகள் 85% நிறைவேற்றப்பட்டது என்று கூறும் முதல்வர் அவர்களே, அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கை ஏன் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களது மாநில மாநாட்டில் பேசிய போது அரசு ஊழியர்கள் இல்லையென்றால் அரசாங்கம் இல்லை. நான் உங்களில் ஒருவனாக இருப்பேன் என்று பேசியதை நாங்கள் மறக்கவில்லை. எங்கள் சங்கத்தை பொருத்தவரை மேலே சொன்னதுபோல் ஜனநாயக பூர்வமாக இயக்கங்களை நடத்துவதோடு மட்டும் அல்ல. மக்களை நோக்கிய பயணம் என்ற அடிப்படையில் அரசின் நல திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வது, கொரோனா காலத்தில் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக களத்திற்கு அர்ப்பணிப்புணர்வோடு மக்களுக்கு தேவையான அனைத்து விதமான பணிகளையும் லட்சக்கணக்கான பொருள் உதவிகள் செய்தது எங்கள் சங்கம். அதேபோல் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு பல மாவட்டங்களில் இலவசமாக பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையை முன் எடுத்து செல்கின்ற அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

பொதுவாகவே தொழிற் சங்கங்கள் என்றாலே கம்யூனிஸ்ட் என முத்திரை குத்தப்படுகிறது. ஏனெனில் தொழிலாளர்கள் எப்போதும் நிர்வாகத்துடன் சமரசமற்றவர்கள் என்பதுதான். உழைப்பவனுக்கும் உழைப்பைச் சுரண்டுபவனுக்கும் உள்ள வர்க்க முரண்பாடே இதற்கு காரணம். தொழிலாளிகளுக்கு வர்க்க அரசியல் நிச்சயமாக இருக்கும். ஆனால் கட்சி அரசியல் என்பது தொழிற்சங்கத்தில் இருக்காது. இதனை புரிந்துகொள்ள மறுப்பவர்கள் தான் தொழிற்சங்கங்களை தமது கட்சியின் அரசியல் பிடியில் வைத்திருப்பார்கள். அப்படிப்பட்ட தொழிற்சங்கங்கள் ஆட்சி பொறுப்பில் இருக்கும் போது கோரிக்கைகளை முன் வைத்திட தயங்குவார்கள். எதிர் கட்சியாக இருக்கும்போது அரசியல் உணர்வுடன் எதிர்ப்பது போன்று நாடகமாடுவார்கள். அதே சமயத்தில் இடதுசாரிகளின் தலைமையிலோ அல்லது இடதுசாரி சிந்தனை கொண்டவர்களின் தலைமையில் உள்ள தொழிற்சங்கங்கள் யார் ஆட்சியில் இருந்தாலும் உழைப்பாளிகளின், ஊழியர்களின் நலன்களுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பர். இப்படிப்பட்ட தொழிற் சங்கங்கள், உலக நலனிலும், தேச நலனிலும் மக்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். இதனை விரும்பாத ஏற்காதவர்கள் நமது சொந்த நலன பாதுகாத்திட தொழிற் சங்கங்களை பயன்படுத்துவார்கள். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி ஜனநாயக முறையில் போராடுபவர்களை. காவல்துறையை கொண்டு அடக்குவது, அனுமதிக்க மறுப்பதும் ஏற்கத்தக்கதாக இல்லை. மேலே சொன்னதுபோல் தொடர்ந்து ஊழியர், மக்கள் நலன்களுடக்காக களத்தில் நின்று போராடக்கூடிய இயக்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

கடந்த மே 7ம் தேதி சேலத்தில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் ஐந்து கட்ட இயக்கம் நடத்த மாநில செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டது.

**முதல் கட்ட இயக்கம்**

09.05.2022 அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் தமிழக நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் பழைய ஓய்வூதியம் அமுல்படுத்த சாத்தியமில்லை என்று சொன்ன பின்புலத்தில் தமிழக முழுவதும் எழுச்சிகரமான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிதி அமைச்சரின் பேச்சை கண்டிப்பதோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மௌனத்தை கலைத்து தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தியும், கடந்த

காலங்களைவிட மிக சக்தியாக உணர்வு பூர்வமாக எழுச்சியுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அனைத்து மாவட்ட மையங்களும் திட்டமிட்டு பிரச்சாரம் செய்து இவ்வியக்கத்தை ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்றது பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

**இரண்டாவது கட்ட இயக்கம்**

20.06.2022 முதல் 24.06.2022 வரை ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம். சங்கொலி முழங்கட்டும் நம் கொடி பறக்கட்டும் ஏழு முனைப் பிரச்சாரம் வீதியெங்கும் ஒலிக்கட்டும் என்ற முழக்கத்துடன் தமிழகத்தின் 7 முனைகளிலிருந்து ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம் 20.06.2022 முதல் 24.06.2022 வரை மிக எழுச்சியுடன் ராமேஸ்வரத்தில் துவங்கிய பிரச்சாரப் பயணம் ராமநாதபுரம், மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களிலும், ஒகேனக்கல்லில் துவங்கிய பிரச்சாரப் பயணம் தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், கூடலூரில் துவங்கிய பிரச்சாரப் பயணம் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களிலும், களியக்காவிளையில் துவங்கிய பிரச்சாரப் பயணம் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், தேனி மாவட்டங்களிலும், வேதாராண்யத்தில் துவங்கிய பிரச்சாரப் பயணம் நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம் மாவட்டங்களிலும், புதுக்கோட்டையில் துவங்கிய பிரச்சாரப் பயணம் புதுக்கோட்டை, திருச்சி,தஞ்சாவூர்,பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும் திருவள்ளூரில் துவங்கிய பிரச்சாரப் பயணம் திருவள்ளூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், செங்கல்பட்டு, தென்சென்னை, வடசென்னை மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பொதுவாக ஊழியர் சந்திப்பு பிரச்சாரப் பயண இயக்கம் மாவட்ட முன்னணி ஊழியர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல இவ்வியக்கத்தின் மூலம் ஊழியர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் நோட்டீசும், கருத்துப்படங்களும் அமைந்தது.

அரசு ஊழியர்கள் மத்தியில் நமக்காக எந்த கட்சி ஆட்சி வந்தாலும் ஊழியர்களின் நலனுக்காக போராடக்கூடிய அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் என்பதை பிரச்சாரம் மூலம் தெரிவித்து பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் இந்த பிரச்சாரம் இயக்கத்தில் பங்கு கொண்டது, குறிப்பாக புதிய பென்சன் இருக்கக்கூடிய ஊழியர்கள் கடந்த காலங்களைவிட அதிக அளவில் பங்கேற்றது மிக சிறப்பு அம்சமாகும்.

தமிழக முழுவதும் 280க்கும் மேற்பட்ட அலுவலக வளாகங்களில் ஊழியர் சந்திப்பு இயக்கம் நடைபெற்றுள்ளது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் அதன் தன்மைக்கேற்ப மிக சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக தர்மபுரி, மதுரை போன்ற மாவட்டங்கள் தாரை தப்பட்டை முழங்க ஊழியர் சந்திப்பு இயக்கத்தை நடத்தினார்கள். இதுபோல் மாவட்ட /வட்ட முன்னணி தோழர்கள் துறைவாரி சங்கத் தலைவர்கள் இரு சக்கர வாகனத்தில் நமது கொடியை கட்டிக்கொண்டு மிக உற்சாகமாகவும், உணர்வு பூர்வமாகவும், மிக எழுச்சியுடன் பிரச்சாரத்தினை ஊழியர்களிடம் கொண்டு சென்றனர். இது இளம் அரசு ஊழியர்கள் மத்தியில் நமது அமைப்புக்கு புது ரத்தம் பாய்ச்சியது போலும் மிகுந்த நம்பிக்கையும் ஏற்படுத்தியுள்ளது. இதில் ஊழியர்களின் பிரச்சினைகளையும், மக்களின் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள செய்வதன் மூலமே மக்கள் / ஊழியர்களின் உணர்வுகளை தட்டி எழுப்புவதன் மூலமே அவர்களை நம்முடன் இணைத்துக் கொண்டு மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோரத, ஊழியர்விரோத கொள்கைகளுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது.

**வேலையின்மை**

இந்தியாவிலும், தமிழகத்தில் இன்று உள்ள முக்கியமான பிரச்சினை வேலையின்மை. இந்தியாவில் 45 ஆண்டுகள் இல்லாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உலகில் இளைஞர்கள் அதிகம் உள்ள நாடு இந்தியா. நாட்டின் மக்கள் தொகையில் 60% இளைஞர்கள் இருக்கிறார்கள். அதில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர் எண்ணிக்கை 15 கோடி பேர். அதுவும் தமிழகத்தில் 78 லட்சம் பேர் வேலை வாய்ப்பு

அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். குறிப்பாக கிராம புறங்களில் வேலை கிடைக்காத நபர்களின் எண்ணிக்கை 20 கோடிக்கு மேல் என்று பல்வேறு நிறுவனங்களின் ஆய்வு அறிக்கை கூறுகின்றன.

மத்திய அரசு பதவி ஏற்றபோது (பிஜேபி) நம்முடைய பிரதமர் அவர்கள் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வழங்கப்படும் என தேர்தல் கால வாக்குறுதி அளித்தார். அதை செயல்படுத்த முடிந்ததா? ஆனால் வேலை கேட்டு போராடினால் இளைஞர்களை பார்த்து பிரதமர் அவர்கள் கூறுகிறார் மத்திய, மாநில அரசு வேலைகளை இளைஞர்கள் எதிர் பார்க்கக் கூடாது. சுய தொழில் கற்றுக்கொள்ள வேண்டும். பாணிபூரி, பக்கோடா விற்று பிழைத்துக்கொள்ளுங்கள் என்கிறார். இன்றைக்கு ஒன்றிய அரசு இராணுவத்தில்(அக்னிபாத்) என்று புதிய முறை புகுத்தி இளைஞர்களின் வேலை வாய்ப்பை கேள்வி குறியாக்கி உள்ளது.

அரசுத்துறையில் மறு சீரமைப்பு என்ற பெயரில் தனியாருக்கு தாரை வார்க்கின்ற போக்கு நீடிக்கிறது. அரசு அலுவலகங்களில் பணியிடம் வெட்டி குறைக்கப்படுவதும் மட்டுமல்ல. இனிமேல் அரசு பணிக்கு தாழ்த்தப்பட் / பிற்படுத்தப்பட்ட மக்கள் உள்ளே வர முடியாத நிலையும், அவுட்சோர்சிங் ஒப்பந்தமுறை, அத்துக்கூலிக்கு ஆள் அமர்த்தும் நிலையை மத்திய, மாநில அரசுகள் மிக வேகமாக அமுல்படுத்தி வருகின்றன. அரசு ஊழியர், ஆசிரியர்கள் நீண்டகால கோரிக்கையான புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், முடக்கப்பட்ட சரண்டர், ஒன்றிய அரசு வழங்கியது போல் தமிழக அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி வழங்க வேண்டும், 21 மாத நிலுவை ஊதியம், சாலைப்பணியாளர் 41 மாதம் பணிக்காலமாக வழங்க வேண்டும், IFHRMS திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும், உள்ளிட்ட தி.மு.க.வின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றிட வேண்டும். எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்றால் இனி போராட்டத்தை கையிலெடுப்பதை தவி வேறு வழியில்லை என்ற நம் நிலைப்பாட்டை தமிழக அரசை சிந்திக்க வைத்துள்ளது.

சிறப்பு கால முறை ஊதியம்/தொகுப்பூதியம்

அடிமைத்தனம் தொடங்கியதற்கு காரணம் இன வேறுபாடோ, நிற வேறுபாடோ அல்ல... பொருளாதாரம் தான். மலிவான உழைப்பைத் தேடி நிலவுக்குகூடப் போயிருப்பார்கள் ஆனால், நிலவைவிட பக்கத்தில் இருந்தது ஆப்பிரிக்கா 1619ல் அங்கே நாலாணாவில் தொடங்கிய அடிமை வியாபாரம் இங்கே தமிழகத்தில் இத்தனை ஆண்டு கழித்து கொத்தடிமை கூலி முறை தொடர்கிறது. இதன் நிலை மட்டும் ஏறுவதே இல்லை. சிறப்பு கால முறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்,தொகுப்பூதியத்தில் உள்ள எம். ஆர்.பி. செவிலியர்கள், ஊர்புற நூலகர் போனற் 3.5 லட்சம் ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து அரசிடம் முறையிட்டோம். எல்லாம் உண்மை, நியாயம் என ஏற்றுக்கொண்ட தமிழக அரசு நிதி இல்லை, பகுதி நேர ஊழியர்கள் முடிந்ததைச் செய்திருக்கிறோம் என்கிறது. முடிந்ததை அல்ல.. அரசு செய்ய வேண்டியதைச் செய்ய வைக்க வலுவான போராட்டங்கள்……. அதற்கான வியூகங்கள் வகுப்பது இன்றைய உடனடிக் கடமைகளாக மாறியுள்ளன. அந்த உடனடியான கடமை ஜூலை 26 ஆம் தேதி மாவட்டங்களில் தர்ணா போராட்டத்தையும் வருகிற ஆகஸ்ட் 23ம தேதி முதல்வர் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் தேர்தல் கால வாக்குறுதி நிறைவேற்ற வலியுறுத்தி நடைபெறும் கோட்டை நோக்கி பேரணியில் லட்சக்கணக்கான ஊழியர்களை பங்கேற்க செய்திட செயலாற்றிட வேண்டும்.

தோழர்களே! இவை மட்டும் அல்ல. இந்த சமூகம் நம்மிடம் நிறைய எதிர்பார்கிறது. கடமைகளைச் சுட்டிக்காட்டி போராட அழைக்கிறது. அது வழி காட்டும் ஒளி விளக்காய் தன் கடந்தகால வரலாறுகளில் பதிவு செய்திருக்கிறது. அதன் வெளிச்சத்தில் அதன் அழைப்பைத் தட்டிக் கழிக்காமல், தள்ளிபோடாமல், ஒதுங்கி போகாமல் சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் இறுகப் பிணைத்துக் கொள்ளும் உண்மையான போராளிகளாவோம்.

ஒன்றுபடுவோம்! போராடுவோம்!!
வெற்றி பெறுவோம்!!!……

# பத்திரிகை மற்றும் வலைத்தள செய்திகளை அரசு ஊழியர்கள் முற்றிலும் நம்பலாமா?




- ஜிஜி

தோழர்களே இந்த கட்டுரையை படிப்பதற்கு முன் உங்களிடம் ஒரு கேள்வியை பகிர்ந்து கொள்கிறேன். ஒரு குடும்பத்தில் ஏற்கெனவே ஒரு நபர் அரசுப்பணியிலிருக்கும்போது அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாமா? ஆம் என்றால் எதன் அடிப்படையில்? அதற்கான பதிலை முடிவு செய்து கொண்டே இந்த கட்டுரையை தொடருங்கள்.

முன்பெல்லாம் அரசு ஊழியர்களைப் பற்றிய அரசாணைகள், அரசு கடிதங்கள், இன்ன பிற செய்திகள் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளுக்கும் சில துறைவாரி சங்க நிர்வாகிகளுக்கும் தெரிய வந்து அதன்பிறகு அது சங்கத்தின் வாயிலாக உறுப்பினர்களுக்கு / ஊழியர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட, ஒன்றிய, வட்ட கிளைகள் மூலமாக சென்று சேரும். இப்போது வாட்ஸ்ஆப் வசதி வந்துவிட்டபிறகு, சங்கத்தின் நிர்வாகிகளுக்கு இந்த விபரங்கள் தெரிவதற்கு முன்பே உறுப்பினர்களுக்கு கிடைத்து அவர்கள் மூலமாக சங்க நிர்வாகிகள் அறிகிற காலமாக இக்காலம் மாறியுள்ளது. தகவல் தொழில்நுட்பம் விரல்நக நுனிவரை வந்துவிட்ட பின் இந்த அரசு கடிதங்கள், அரசாணைகள், அமைச்சகத்திலிருந்து வெளியிடப்படும் பத்திரிகை செய்திகள் மட்டுமல்ல அவைகுறித்து வரும் எதிர்மறை விமர்சனங்கள், கட்டுரைகள், மீம்ஸ்கள் போன்றவற்றை முதலில் யார் பார்வேர்ட் செய்வது என்பதில் சமீபகாலத்தில் பணியில் சேர்ந்திருக்கும் இளையதலைமுறை முதல் அடுத்த மாதம் ஓய்வுபெறும் அலுவலர்கள் வரை போட்டாபோட்டி நடக்கிறது.

நம்மை நேரில் பார்த்தால் கண்டுகொள்ளாமல் சென்றுவிடும் நபர்கள் பலபேர் தங்கள் வாட்ஸ்ஆப்பிலிருந்து காலை வணக்கம் தொடங்கி நண்பகல் வணக்கம், பிற்பகல் வணக்கம், மாலை வணக்கம், இரவு வணக்கம், நள்ளிரவு வணக்கம் வரை, நாம் வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டால்கூட விடாமல் வணக்கங்களை பதிவிடுவதும் அந்த நபரிடமிருந்தோ அல்லது குரூப்பிலிருந்தோ வெளியே வந்துவிட்டாலும் 'விடாது கருப்பு' போல நம்மை மீண்டும் மீண்டும் குரூப்பில் போட்டு இம்சை படுத்துவதும் இந்தப்பிறவியில் நாம் அனுபவித்தே ஆகவேண்டிய சாபமாகியுள்ளது.

மேற்படி நபர்கள் ஒருவகை என்றால் இன்னொரு வகை நபர்கள் இருக்கிறார்கள் இவர்கள் தங்கள் வாட்ஸ்ஆப்பில் வந்த செய்திகளை படித்து விட்டு அது குறித்து தங்கள் விமர்சனங்களைப் பதிவிடுபவர்கள். பல பத்திரிகைகள், ஊடகங்கள், வலைத்தளங்கள் இன்றைய நாட்களில் பரபரப்புக்காகவே பல செய்திகளை அதன் உண்மைத் தன்மையை மறைத்து செய்திகள் வெளியிடுகின்றன. அதுபோன்ற பத்திரிகைச் செய்திகள் வாட்ஸ்ஆப்பில் வலம்வரும்போது அது குறித்து விமர்சனங்களும் கருத்துக்களும் எதிர்மறையாக வந்துவிழுந்து மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றன. அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் சில ஊடகங்களும் பத்திரிகைகளும் வெளியிடும் செய்திகள் அவை பொய் என்று தெரியாத அளவுக்கு மக்கள் மத்தியில் அரசு ஊழியர்களை அசிங்கப்படுத்தும் நிகழ்வாக தொடர்ந்து நடந்து வருகிறது. அரசு

ஊழியர்களுக்கு அகவிலைப்படி அறிவித்தால் ஒரு பத்திரிகை 'அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அடித்தது ஜாக்பாட்' என்று தலைப்பிட்டு செய்தி வெளியிடும். இன்னொரு பத்திரிகை இந்த கூடுதலான அகவிலைப்படி வழங்கப்படுவதால் அரசுக்கு வருடத்திற்கு 1500 கோடி ரூபாய் செலவாகும் என்று குத்திக்காட்டும். சமீபத்தில் கூட விருப்ப ஓய்வில் செல்பவர்களுக்கு வெயிட்டேஜ் முறையில் முழுப்பணிக்காலத்தை கணக்கில் எடுக்கும் முறை குறித்து செய்தி வெளியான போது 'அரசு ஊழியர்களுக்கு புதிய சலுகை என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டது ஒரு பத்திரிகை. இன்னொரு பத்திரிகை 'அரசு ஊழியர்களுக்கு வெயிட்டான வெயிட்டேஜ்' என்று செய்தி போட்டது. சொந்தக்காரர்கள் எல்லாம் போன்போட்டு 'உனக்கு எவ்வளவு கிடைக்கும்' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு உப்பு சப்புமில்லாத இந்த அறிவிப்புக்கு ஊடகத்தில் எவ்வளவு பெரிய பில்டப்?

பெரும்பாலான பத்திரிகைகள், அரசாணைகள் அரசு அறிவிப்புகள் போன்றவற்றில் பொய்மூலாம் பூசி வெளியிடுவது சாதாரணமாகவிட்ட நிலையில் நீதிமன்ற தீர்ப்புகள் மட்டும் விதிவிலக்கா என்ன? அத்தகைய பொய்முலாம்களை நீதிமன்ற தீர்ப்பிற்கு அவதூறு கற்பிக்கும் வகையில் செய்தி வெளியிட்டு அந்தச் செய்தியின் உண்மைத்தன்மையை அறியாமலேயே அரசு ஊழியர்கள் அதை வாட்ஸ்ஆப்பில் விவாதப் பொருளாக்கி நீதிமன்றத்தின் மீது அதிருப்தி மற்றும் அவநம்பிக்கை கொள்ள காரணமாக இருந்த ஒரு பத்திரிகைச் செய்தியைத்தான் நாம் இங்கு பார்க்கப் போகிறோம்.

என்னுடைய நண்பரின் தந்தை வருவாய்த் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்ட அதிகாரி. அவர் ஒரு பேப்பர் கட்டிங்-ஐ என்னுடைய வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்பியிருந்தார். அந்த பேப்பர் கட்டிங்கில் ''22 ஆண்டுகளுக்கு பின் பணி நீக்கம். அரசு உத்தரவை ரத்து செய்தது செல்லும்'' என்ற தலைப்பில் செய்தி இருந்தது. ஒரு குடும்பத்தில் ஏற்கெனவே ஒரு நபர் அரசுப்பணியிலிருக்கும்போது அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு நபருக்கு கருணை அடிப்படையில் கொடுக்கப்பட்ட பணி நியமனத்தை 22 ஆண்டுகள் கழித்து ரத்து செய்த அரசு உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு குறித்த செய்தி அது. வழக்கை விசாரித்து அரசு போட்ட உத்தரவை ரத்து செய்து பணி நீக்கம் செய்யப்பட்ட நபரை மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிட்ட நீதிமன்ற உத்தரவை எதிர்த்து அரசாங்கம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டது. உயர்நீதிமன்றமோ கீழமை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை உறுதி செய்தது. அதைப் பொறுத்து வெளியிடப்பட்டிருந்த செய்திதான் அது. நண்பரின் தந்தை இந்த பேப்பர் கட்டிங்கை வாட்ஸ்அப் செய்துவிட்டு ''இந்த வழக்கின் தீர்ப்பு சரிதானா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டிருந்தார்.

அதைப் படித்ததும் எனக்கும் ஆச்சர்யமாகத்தான் இருந்தது. இந்தச் செய்தியை படிக்கும் அரசு ஊழியர்கள், சங்கவாதிகள், பணிவிதிகளை அறிந்தவர்கள் யாராக இருந்தாலும் நீதிபதிகள் பணி விதிகளை சரியாக படிக்காமலேயே தீர்ப்பெழுதி விட்டதாகவே தெரியும். எனக்கும் அப்படித்தான் தோன்றியது. ஆனால் இரண்டு நீதிபதிகள் கண்ணை மூடிக்கொண்டு ஒரே மாதிரி உத்தரவிடமுடியுமா? என்ற சந்தேகம் என்னைக் குடைந்தது. அப்படி இடப்பட்ட உத்தரவை இவ்வளவு தைரியமாக ஒரு பத்திரிகை எப்படி வெளியிட்டது? என்ற சந்தேகமும் என்னை யோசிக்க வைத்தது.

மேற்படி செய்தியின் உண்மைத்தன்மையை அறியும் பொருட்டு சம்பந்தப்பட்ட நீதிமன்ற உத்தரவைத் தேடி அலைந்து கொண்டிருந்த சமயத்தில் என்னுடைய நண்பரின் தந்தையிடமிருந்து இன்னொரு வாட்ஸ்ஆப் செய்தி வந்தது. ''கருணை அடிப்படையிலான நியமனங்களை செய்யும் அதிகாரம் பெற்ற அலுவலர் தன்னுடைய பணியை ஒழுங்காக கவனிக்காததன் விளைவு, ஒரு குடும்பத்தில் ஏற்கெனவே ஒரு நபர் பணியில் இருக்கும்போது இன்னொரு நபருக்கு கருணை அடிப்படையில் பணிகொடுத்ததும் அதை 22 ஆண்டுகள் கவனிக்காமல் விட்டதும்'' என்ற கருத்தை தெரிவித்திருந்தார் அவர். ஒரு தவறை 22 ஆண்டுகள் வரை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்ட அரசு அதிகாரிகள் மீதான கோபமும் அந்தத் தவறை நியாயப்படுத்தியிருக்கும் நீதிமன்ற உத்தரவின் மீதான அவரின் வெறுப்பும் நியாயமானதாகவே தோன்றியது எனக்கு. இன்றைய காலகட்டத்தில் படிக்காமலேயே

மருத்துவர், படிக்காமலேயே ஆசிரியர், படிக்காமலேயே வழக்கறிஞர் போல படிக்காமலேயே நீதிபதிகளும் வருகிறார்களோ என்ற அவரின் வாட்ஸ்ஆப் கருத்து அவரை மேற்படி செய்தி எத்தகைய மன உளைச்சலுக்கு ஆளாக்கியிருக்கிறது என்பதை எனக்கு உணர்த்தியது. அதன்காரணமாகவே மேற்படி தீர்ப்பை மேலும் தீவிரமாகத் தேடி கண்டுபிடித்து படித்தபோதுதான் அந்த உண்மை தெரிந்தது. மேற்சொன்ன பத்திரிகைச் செய்தியில் அரசாணை எண்.560 வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை நாள். 3.8.1977 மற்றும் அரசு குறிப்பாணை எண்.34107/என்1/77-1 நாள் 4.5.78 ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி கருணை அடிப்படையிலான பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை நீதிமன்றம் சுட்டிக்காட்டி தீர்ப்பு வழங்கியுள்ளதை அந்த பத்திரிகை செய்தியில் குறிப்பிடாமல் விட்டுவிட்டதுதான் நீதித்துறையையும் நியமனம் செய்த அதிகாரியையும் அந்தச் செய்தியை படித்தவர்களை தவறாக நினைக்க வைத்துள்ளது என்பது புரிந்தது. மேற்படி உத்தரவில் நீதியரசர்கள் அரசாணை நிலை எண்.560ஐ சுட்டிக்காட்டி தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை.

''அரசாணை எண்.560, ஒரு அரசு ஊழியர் அவருடைய குடும்பத்தை வறுமை நிலையில் விட்டுவிட்டு தன் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவடைய வாரிசுதாரர் மேற்படி அரசாணையில் உள்ள சலுகையை, ஏற்கெனவே அந்த குடும்பத்தில் வேறு ஒரு நபர் அரசுப்பணியில் இருந்தாலும், பணி நியமன அதிகாரம் பெற்ற அதிகாரி அந்தக் குடும்பம் தற்போதும் வறுமை நிலையில் உள்ளதாக கருதும் நிலையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படலாம் என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறது. பணி நியமன அதிகாரி, இறந்து போனவருடைய குடும்பம் வறுமை நிலையில் உள்ளது என தீர்மானிக்கும் முன்பு இறந்துபோன அரசு ஊழியர்களுக்கு எத்தனை வாரிசுதாரர்கள் உள்ளனர், அவர்களில் வருவாய் ஈட்டும் வாரிசுதாரர்களின் வருமானம் மற்றும் எவ்வளவு கடன் உள்ளது ஆகிய விபரங்களை கருத்தில் கொண்டு முடிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும், இறந்துபோன அரசு ஊழியரின் குடும்பத்தில் ஏற்கெனவே ஒரு உறுப்பினர் அரசுப் பணியில் இருக்கும் நிலையில் இன்னொரு வாரிசுதாரர் இறந்து போனவரின் பணியை கருணை அடிப்படையில் பெறுவதற்கு உரிமையற்றவர் என்றாலும் குடும்பத்தின் வறிய நிலையை கருத்தில் கொண்டு அவருக்கு பணி நியமனம் வழங்கலாம் என்று கூறுகிறது. (அரசாணை எண்.560 தொழில் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 3.8.1977 – பத்தி 6 மற்றும் 7)''

மேற்படி நீதிமன்ற உத்தரவு, அரசாணை எண்.560 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள். 3.8.1977 மற்றும் அரசு குறிப்பாணை எண்.34107/என்1/77-1 நாள் 4.5.78 ஆகியவற்றினை முன்னிலைப்படுத்தி வழங்கப்பட்டுள்ளதை அறியலாம். ஆனால் அந்த பத்திரிகைச் செய்தியில் முக்கியமாக இடம்பெற வேண்டிய இந்த விபரம் வேண்டுமென்றே செய்தியின் பரபரப்புக்காகவே விட்டுவிடப்பட்டுள்ளது. இதனால்தான் இவ்வளவு குழப்பங்களும் மன ஆற்றாமைகளும்.

அரசின் பணிநீக்க உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது எந்தவகையிலும் அநீதியானதோ, நியாயமற்றதோ அல்ல என்பதை இதன்மூலம் உணரலாம். இந்த விளக்கத்தை என் நண்பரின் தந்தைக்கு அனுப்பிய பிறகே எனக்கு நிம்மதி பெருமூச்சு வந்தது.

எனவே தோழர்களே, அரசு ஊழியர்களைப் பற்றியோ அரசு விதிகளைப்பற்றியோ முரண்பாடாக ஏதாவது பத்திரிகைச் செய்திகள், நீதிமன்ற உத்தரவுகள், அரசு விளக்கங்கள் என ஏதாவது செய்திகள் உங்கள் கைப்பேசிக்கு வந்தால் அவற்றை அப்படியே பார்வேர்ட் செய்வதையும் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்தறியாமல் விமர்சனம் செய்வதையும் தவிர்ப்போம். இப்போது மீண்டும் இந்த கட்டுரையின் முதல் பத்தியில் கேட்டிருந்த கேள்வியை படித்தமாத்திரத்தில் நீங்கள் கொண்ட நிலைப்பாடு சரியானதுதானா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

[ஆதாரம்: நீதிப்பேராணை மேல்முறையீடு எண்.678/2021 மதராஸ் உயர்நீதிமன்றம்; அரசாணை எண்.560 வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை நாள். 3.8.1977; மற்றும் அரசு குறிப்பாணை எண்.34107/என்1/77-1 நாள் 4.5.78] ●

கட்டுரை



# தனியார்மய ஷாக்கில் மின்சார வாரியம்!

- இரா.மங்களபாண்டியன்

சர்வதேச நிதி மூலதனத்தின் கடுமையான நிர்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள மின்சாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, இரயில்வே ஆகிய சேவைத்துறைகளை இலாபமீட்டும் சந்தைத்துறையாக மாற்றுவதற்கான திட்டத்தை மத்தியில் ஆளும் ஒன்றிய அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.இன்றைய இந்தியாவின் உச்சகட்ட மின் தேவை 1,75,000 மெகாவாட் ஆகும். இதில் 1,57,136 மெகாவாட் மின் உற்பத்தி என்பது, மத்திய அரசால் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மின்சாரத் துறையின் செயல்பாட்டில் மின் உற்பத்தி தான் முக்கியமானதாகும். அது தான் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கொள்ளை இலாபத்தை உத்தரவாதப்படுத்தக் கூடியதாகும். இது இன்று முழுமையாக தனியார் ஆதிக்கத்தின் கீழ் சென்றுவிட்டது. மின்சார சட்டம் 2003 வருவதற்கு முன்பாக தனியார் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் மின் விநியோக நிறுவனங்களின் மூலமே விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் மின்சார சட்டம் 2003 மற்றும் மின்சாரக் கொள்கை 2005 ஆகியவற்றின் அடிப்படையில் திறந்தவெளி மின் பரிமாற்றக் கொள்கையை மத்திய ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்தி உள்ளார்கள்.


மின்சாரத்தை எந்த தனியார் வேண்டுமானாலும் உற்பத்தி செய்யலாம். யாருக்கு வேண்டுமானாலும் விநியோகம் செய்து கொள்ளலாம். மின் விநியோகம் செய்வதற்கு கட்டண நிர்ணயிப்பு, மின் மீட்டர் பொருத்துவது, மின் பயனீட்டு அளவு எடுப்பது, மின் கட்டணம் வசூலிப்பது என அனைத்தும் செய்து கொள்ளலாம் என தனியாருக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கி, அதை முறைப்படுத்துகின்ற அரசு இயந்திரம் செயலற்றதாக்கப்பட்டுள்ளது. திறந்தவெளி மின்பரிமாற்றக் கொள்கை அமலாக்கத்திற்கு வந்த பின்னர் அரசு துறை சார்ந்த மின் விநியோக நிறுவனங்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தனியாரிடம் மின் நுகர்வோர்கள் மின்சாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உதாரணமாக மராட்டிய மாநிலத்தில் உள்ள மிகப்பெரிய உயர் அழுத்த மின் நுகர்வோர், மராட்டிய மாநில மின்வாரியத்திலிருந்து மின்சாரம் பெறுவதை மாற்றி தனியார் மின் விற்பனையாளர்களிடமிருந்து மின்சாரத்தை பெறும் நிலைக்கு சென்றுள்ளனர். மராட்டிய மாநில மின்வாரியம் தான் விற்பனை செய்யும் 30,000 மில்லியன் யூனிட்டில் 6000 மில்லியன் அளவு யூனிட் மின்சாரம் தனியாரிடமிருந்து மின்சாரத்தை பெறுவதற்கு சென்றுவிட்ட காரணத்தினால் மாநில மின்வாரியத்தின் கீழ் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்கள் தனது உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால் வாரியத்தின் வருவாயும், செயல்பாடும் சுருங்கி சீரழியும் திசையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் உள்ள உயர் அழுத்த வணிக மின் நுகர்வோர்கள் ஒரு பெரும் பிரிவினர் தனியார் மின் விற்பனையாளர்களிடம் மின்சாரத்தை பெறும் நிலைக்கு சென்றுவிட்ட காரணத்தினால் பஞ்சாப் மாநில மின் உற்பத்தி நிறுவனம் உற்பத்தி செய்த மின்சாரத்தை விற்க பெருமுயற்சி எடுத்து வருகிறது. ஆனால் வாங்குவதற்கோ ஆள் இல்லை.

மத்திய பொதுத்துறை நிறுவனமான தேசிய அனல் மின் கழகம், தான் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை 1 யூனிட் ரூ.4.50 பைசாவிற்கு விற்பனை செய்வதற்கு தயாராக இருந்த போதும் தமிழ்நாடு மின் வாரியம் உட்பட இதர மின்விநியோக பயனீட்டாளர்கள் வழங்குவதற்கு தயாராக இல்லை. அதனால் தேசிய அனல் மின் கழகம் உற்பத்தி செய்யும் தனது பல மின் நிலையங்களின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய துர்பாக்கியம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தேசிய அனல் மின்

நிலையங்களை அமைக்க திட்டமிட்டதை இப்போது கைவிட வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களின் அவலநிலையோ அப்படி என்றால் தமிழகத்தின் நிலை அதை விட மோசமான நிலைக்கு சென்று கொண்டுள்ளது. தமிழக மின்வாரிய மின் நுகர்வோர்களில் மின்சார வாரியத்திற்கு நிதியை உருவாக்கித் தருவது உயர் அழுத்த, வணிக மின் நுகர்வோர்கள் என்றால் மிகையாகாது. தமிழகத்தில் உயர் அழுத்த மின் நுகர்வோர் எண்ணிக்கை 9249, அவர்களில் சரிபாதி மின் நுகர்வோர், தனியாரிடமிருந்து மின்சாரத்தை பெறும் நிலைக்கு சென்று விட்டனர். அது மட்டுமல்லாமல் தன் பயனீட்டு மின் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் 986 மெகாவாட் மின்சாரத்தை நேரிடையாக அவர்களே மின் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கின்றனர். அதனால் சுமார் 1000 மெகாவாட் பொது மின்சார உற்பத்தியும், பரிமாற்றமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவை ஒரு பக்கம் இருக்க, மின்சார சட்டம் 2003ல் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு தனியார் மின் விற்பனையாளர் மின்சாரத்தை விநியோகிக்கலாம் என்ற ஷரத்தை பயன்படுத்தி திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரியில் 2518 ஏக்கர் நிலத்தில் உள்ள பல்பொருள் உற்பத்தி சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு மின் கழக தூத்துக்குடி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் 25 ஆண்டுகளுக்கு மின்விநியோகம் செய்து கொள்ளலாம் என்ற அனுமதியை ஒழுங்குமுறை ஆணையம் வழங்கியுள்ளது. மேலும், தமிழகத்தில் அதிக அளவு மின்சாரத்தை நுகரும் இரயில்வே துறை தமிழக மின் வாரியத்திடம் மின்சாரம் பெறுவதில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனுச் செய்துள்ளது. இரயில்வே துறைக்கு அனுமதி அளித்து அவர்கள் மின்சாரத்தை பெறுவதற்கு வெளியில் சென்றுவிட்டால் தமிழக மின்வாரியத்தின் மின் விநியோகத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும். தனது சொந்த மின் நிலையை உற்பத்தியை நிறுத்தும் அவல நிலை ஏற்படும். தனியார் மின் விநியோகிப்பாளர் பலருக்கு மின் விநியோகம் அளிப்பதற்கு அனுமதி அளித்தால் போட்டி உருவாகும், கட்டணம் குறையும் என்று சொல்லும் வாதங்கள் எல்லாம் பொய்யான




வாதங்களே. தில்லி மாநகர மின் விநியோகம் என்பது தனியாரால் பராமரிக்கப்படுகிறது. மேற்கூறிய வாதத்தின் அடிப்படையில் தனியார் கைக்கு மாற்றப்பட்ட தில்லியில், மின் கட்டணம் குறைந்திருக்க வேண்டும். ஆனால் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது என்பது தான் உண்மை.

தூத்துக்குடி பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் மின் விநியோகம் செய்வதற்கு அனுமதி கேட்ட போதே, மின் உற்பத்தி செலவு ரூ.4.50 பைசா என்று இருந்த போதிலும் உயர் அழுத்த மின் நுகர்வோர்களுக்கு ரூ.6.25 பைசாவும், வணிக மின் நுகர்வோர்களுக்கு ஒரு யூனிட்டு ரூ.8க்கு விற்பதற்கும் அனுமதி கேட்டது. மின்வாரிய செயல்பாட்டை முறைப்படுத்துவதாக சொல்லப்படும் மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையமும் உற்பத்தி செலவைவிட கூடுதல் விலைக்கு மின்சாரத்தை விற்க அனுமதி அளித்துள்ளது. 2017 ஆம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தில் மின்சாரத்தை விற்றதின் வாயிலாக வாரியத்தின் வருவாய் ரூ.45528 கோடி, 2018 ஆம் ஆண்டில் வாரியத்தின் வருவாய் ரூ.43964 கோடி ஒரு ஆண்டில் வருவாய் இழப்பு ரூ.2662 கோடி. நிலைமை நீடித்தால் இது மேலும் தீவிரமாகும். மின்வாரிய செயல்பாடு குறையும், மானிய விலையில் விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும், ஏன் வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் இலவச மானிய விலையில் மின்சாரம் என்பது கனவுப் பெருளாக மாறும். இப்படியாக ஒன்றிய அரசு சர்வதேச நிதிமூலத்தின் கட்டளைக்கிணங்க, சேவைப் பொருளாக உள்ள மின்சாரத்தை சந்தைப் பொருளாக்கி மின்துறையை கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தாரை வார்க்கும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்தவேண்டியது நமது கடமை. ●

# ஊடக உலகில் உண்மையின் பேரொளி

- பெரணமல்லூர் சேகரன்

புற்றீசல் போன்றே பல்லிதழ் வரினும்
வற்றாத நதியென மனிதம் பரப்பிடும்
கற்றாக வேண்டிய  நாளிதழ் தீக்கதிர்
முற்றாக உழைக்கும் மாந்தரின் செங்கதிர்

உழைப்போர் உடைவாள் தீக்கதிர் இன்று
அழைத்திடும் வைரவிழா அறுபதாண்டு நன்று
உரிமைப் போர்களில் களத்தில் நின்று
உரத்துப் பரப்புரை செய்திடும் வென்று

உழைக்கும் மாந்தரின் உரிமைத் தூதுவன்
பிழைத்திடும் பாட்டாளி வர்க்கக் காவலன்
துரத்தும் மக்கள் விரோதம் எதிர்க்கும்
வரித்துக் கொண்ட கொள்கையைக் காக்கும்

சாதியும் மதமும் பிரிவினை வாதமும்
மோதிப் பற்பல பிளவுகள் சேதமும்
தீயெனப் பற்றிப் படரும் வேற்றுமை
நீரென அழித்து கட்டுமே ஒற்றுமை

இலக்கியம் பேசும் போதிலும் இலக்கு
கலக்கம் இலாது காட்டும் விளக்கு
ஆபாச எழுத்தும் எண்ணமும் இலாது
ஆவேச பெண்ணுரிமை முழங்கும் விடாது

அச்சம் தவிர்த்து ஆள்வோர் அநீதியை
இச்சகத் துளோரெலாம் அறிந்திடச் செய்யும்
எச்சமாய்க் கிடக்கும் அடிமை விலங்கு
உச்சமாய்ப் போரிடு தகரும் விலங்கு

மானுட முன்னேற்றத் தடையாய்த் திகழும்
மூட நம்பிக்கை ஒழித்திட எழுதும்
நாடு நலம்பெற அறிவியல் கருத்து
ஏடு எழுதும் தீக்கதிர் சிறப்பு

பன்முகத் தன்மை ஞாயிறு தோறும்
வண்ணக் கதிராய் ஒளிரும் வாரம்
முன்னத்தி ஏர்களின் கட்டுரை ஏறும்
திண்ணமாய் வழிகாட்ட சமூகம் மாறும்

கருத்துச் சித்திரம் முதலாய் இதழில்
கவிதை முத்திரை பதிக்கும் தமிழில்
கருத்துக் கருவூல செய்திகள் ஏட்டில்
மருத்துவக் குறிப்பும் உண்டுதீக் கதிரில்

ஊடகம் விலைபோகும் இந்நாளில் உறுதியாய்
ஊடக அறத்துடன் மனிதப் பற்றாய்
ஊடக உலகின் உண்மைப் பேரொளி
ஏடெனும் தீக்கதிர் திக்கெட்டும் பரப்பினி

தீக்கதிர் வைரவிழாக் கொண்டாட்ட நாளில்
திக்கெட்டும் வர்க்க அணிதிரட்ட மார்க்சியம்
வித்திட்ட மார்க்சின் சிலையை எழுப்புவோம்
மொத்தத்தில் பொதுமை சமூகம் சமைப்போம்

# கழிசடைகள்

- குணா


துக்ளக் இதழின் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் அவர்கள் முன்னிலையில் அதன் ஆசிரியர் ஆடிட்டர் திரு.குருமூர்த்தி வங்கி அதிகாரிகளை ஒப்பிட்டு பேசிய வார்த்தை 'கழிசடைகள்' இது இந்திய அரசியல் களத்தில் அனலை பறக்கவிட்டது.

காட்டுக்குள் குன்றின் உச்சியில் அந்தக் குடில் இருந்தது.

குன்றின் அடிவாரத்தில் காரை நிறுத்தி விட்டு கலியமூர்த்தி தன்னுடைய 15 வயது மகனுடன் படிக்கட்டில் நடந்து கொண்டிருந்தார். கலியமூர்த்தி வளர்ந்து வரும் அரசியல்வாதி. அவன் மகனோ நேர்மையாளன். தன் அப்பா கலியமூர்த்தி செய்யும் தவறுகளை அவ்வப்போது சுட்டிக்காட்டுவதாலும் தட்டிக் கேட்பதாலும் மற்றவர்கள் மத்தியில் அவருக்கு பெரும் தர்மசங்கடம் ஏற்பட்டது. யாரோ ஒரு எம்.பி. அவருடைய மகனை காட்டில் உள்ள இந்த சாமியாரிடம் சேர்த்துவிட்டால் உங்களுக்கும் நிம்மதி ஏற்படும் மேலும் எதிர்காலத்தில் பெரிய ஆன்மிக சாமியாராக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொன்னதன் பேரில் அமைச்சரின் பரிந்துரையில் ஆன்மிக சாமியாரின் குருகுலத்தில் தன் மகனை சேர்க்க சென்றுகொண்டிருக்கிறார்.

"மகனே மகேந்திரா நீ, நீதி, நியாயம், நேர்மை, தர்மம் பத்தியெல்லாம் நிறைய பேசறதுனால இங்கே இருக்கற சாமியாரிடம்ட சேர்த்துவிட வந்திருக்கேன். அவரை உன் குருவா ஏத்துக்கிட்டு அவர்கிட்டே இருக்கிற ஞானத்தையெல்லாம் கத்துக்கோ.'' என்றார் கலியமூர்த்தி.

குருகுலத்தில் ஐந்து சீடர்கள் இருந்தார்கள். குரு அந்த ஐந்து பேர்களையும் மகேந்திரனுக்கு அறிமுகப்படுத்தி குருகுலத்தில் அனைத்து வேலைகளையும் நீங்கள் ஆறுபேர்தான் செய்ய வேண்டும். யாருக்கு என்ன வேலை செய்ய முடியுமோ அதை செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு தவத்தில் மூழ்கிவிட்டார்.



மகேந்திரன் அந்த ஐந்து பேரிடமும் தான் தோட்ட வேலை செய்வதாகக் கூறி மண்வெட்டி கத்தி கடப்பாறையை எடுத்தான். அப்போது அந்த ஐந்து நபர்களில் ஒருவன், "மகேந்திரா குருவிடம் சொல்லி எங்களைப்போல் நீயும் மொட்டை அடித்துக்கொள். அப்போதுதான் சீக்கிரம் ஞானத்தை அடையமுடியும்.'' என்றான். அதற்கு மகேந்திரன் "என்னால் முடி வெட்டிக்கொள்ள முடியாது. இந்த முடிக்கு எவ்வளவு ஞானம் கிடைக்குமோ அவ்வளவு கிடைத்தால் போதும்.'' என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

மறுநாள் காலையில் மகேந்திரன் குருஜியிடம் வந்தான். "குருவே மொட்டையடித்துக் கொண்டால் சீக்கிரமே ஞானம் கிடைத்துவிடுமா?''

"யார் சொன்னது?'' என்ற கேட்டார் சுவாமிஜி.

"நமது குருகுலத்தில் உள்ள மற்ற சீடர்கள்தான். அவர்கள் என்னை முடிவெட்டசொல்லி கட்டாயப்படுத்துகிறார்கள்.''

"அது அவரவர் மனநிலையைப் பொறுத்தது. உனக்கு எது பிடித்திருக்கிறதோ அப்படி இரு.'' என்றார் குரு.

இரண்டொரு நாட்கள் கழித்து மகேந்திரன் மீண்டும் குருவை தனியே பார்க்க வந்தான். "குருவே கழிசடைகள் என்றால் என்ன?'' என்று கேட்டான்.

"தேவையில்லாத உரோமங்கள். அவைகள் அவ்வப்போது நீக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட உரோமங்களை கழிசடைகள் என்பார்கள்."

"குருவே என்னைப் பார்த்து அந்த ஐந்து சீடர்களும் கழிசடை என்று பேசினார்கள்.'' என்றான்.

"மகேந்திரா, நீ இங்கு வந்திருக்கும் நோக்கம் என்னவோ அதை நோக்கி நடக்க வேண்டும் இடையில் வரும் தடைகளை பொருட்படுத்தாமல் அவற்றைத் தாண்டிச் சென்றுவிட வேண்டும்.'' என்றார். குருவின் போதனையை ஏற்று மகேந்திரன் தன் வேலைகளைத் தொடர திரும்பி விட்டான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு தோட்டத்தில் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த மகேந்திரனை ஐந்து சீடர்களும் அழைத்தார்கள். "மகேந்திரா என்னது இது? தினம் தினம் நாம் உறங்கும் இந்த அறையில் முடிகள் விழுந்து கிடக்கின்றன. நீ மொட்டை அடித்துக் கொள் என்றாலும் செய்ய மாட்டேன்கிறாய். இனிமேல் இரவில் நீ குடிலுக்கு வெளியே உள்ள திண்ணையில் படுத்துக்கொள்.'' என்றார்கள்

"சீடர்களே அறையை சுத்தப்படுத்துவது என்பது உங்கள் வேலை அதில் எத்தனை முடிகள் விழுந்திருந்தாலும் நீங்கள்தான் சுத்தப்படுத்த வேண்டும். முடியாது என்றால் நீங்கள் ஐவரும் திண்ணையில் படுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதற்கு சீடர்களில் ஒருவன் "டேய் விடுங்கடா இந்த கழிசடைக்கு நாம என்ன சொன்னாலும் புரியாது'' என்றவனின் மேல் பாய்ந்தான் மகேந்திரன். ஐவரையும் நையப்புடைத்தான். ஐவரும் அலறிக் கொண்டு குருஜியிடம் ஓடினார்கள்

குருஜி மகேந்திரனை அழைத்தார் "நீ இங்கு வந்திருக்கும் நோக்கம் என்னவோ அதை நோக்கி நடக்க வேண்டும், இடையில் வரும் தடைகளை பொருட்படுத்தாமல் அவற்றைத் தாண்டிச் சென்றுவிட வேண்டும். என்றல்லவா சொல்லியிருந்தேன். ஆனால் இப்போது உன் நோக்கத்தை மீறியிருக்கிறாயே?'' என்றார் அவர் முகத்தில் ஒரு படபடப்புத் தெரிந்தது.

"நான் என்னுடைய நோக்கத்திலிருந்து விலகவில்லை குருவே. தடைகளைத் தாண்டிச் செல்ல முயற்சித்தேன். முடியவில்லை அதனால் தடைகளை உதைக்க வேண்டியதாகிவிட்டது.'' என்றான்.

"இப்படி கன்னம் கன்றிப் போகும் அளவுக்கு அடித்திருக்கிறாயே இவர்கள் யார் என்று தெரியுமா?''

"சொல்லுங்கள் தெரிந்து கொள்கிறேன்.''

"இவர்கள் அனைவரும் மத்திய அமைச்சர்களின் மகன்கள் உறவினர்கள்.''

"அது உங்களைப்பொறுத்தவரை. என்னைப்பொறுத்தவரை அவர்கள் ஐவரும் உங்களோடு சேர்ந்த ஒட்டுமொத்த கழிசடைகள்.'' என்றவன் அடுத்த கணம் அந்தக் குடிலிலிருந்து இறங்கி நடக்க ஆரம்பித்தான்.

இந்த உலகம் முழுவதும் அதிகாரத்தினாலும் பொய்களாலும் ஆட்பட்டிருப்பது அவனுக்கு புரிந்தது. ●

## "பஞ்ச்"

மொரப்பா

தண்டிக்கும் இயல்போடு, ஆட்சியாளன் தன் குடிகளிடம் வரி கேட்பது, ஆயுதத்தைப் பிடித்துக் கொண்டு நெடுவழிப் பயணிகளிடம் "பணத்தைப் போடு" - என்று மிரட்டுவதற்குச் சமம்.



வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

- குறள் 552

# எங்கள் வாழ்க்கை எவருக்கிங்கே புரியும்?

- புதுகை பூவண்ணன்

உனக்கென்ன
அரசாங்க உத்யோகம்...
நண்பன் சொல்லி
நகர்ந்தான்...!

அவனுக்கென்ன
தெரியும்...?
அரசு ஊழியனின்
வீட்டிற்கு
வந்து போகும்
உறவுகள்... நட்புகள்...
ஏமாந்து போகும் அவலம்...!

திங்கள் துவங்கி
திங்கள் வருவதற்குள்
திக்கு முக்காடும்
அலுவல் சுமையில்
ஓடிவிடுகிறது
ஒவ்வொரு பொழுதும்...!
மாத இறுதி எப்போது வரும்...
என்ற எதிர்பார்ப்பே எப்பொழுதும்
நினைவில் நிற்கும்..!

ஒருநாள் வாங்கும்
ஊதியம்
ஒன்றுக்கும் போதாமல்
தவிக்கும் தவிப்பு
யாருக்கு இங்கே புரியும் ?

ஊழியத்திற்கு
போதிய ஊதியமில்லை
வாழ்க்கைத்தரம்
உயரவில்லை...!

"என்ன
ஊழியம் பார்த்து
உருப்பட்டான்..."
கேள்வியும் வசவுகளும்
நித்தம் கொல்லும்...!

பிள்ளைகள் படிப்பு...
மருத்துவம்...
உற்றார் உறவினர்...
வைபோகங்கள்...

இப்படி
ஒட்டிக்கிடக்கிறது
ஊதியத்திலிருக்கும்
ஒவ்வொரு
ரூபாய் நோட்டுக்கும்
ஒரு செலவு...!
குடிநீர் துவங்கி
குளியல் நீர் வரை...
வீட்டிலிருந்து வெளியேறி
வீட்டுக்குள் நுழையும் வரை...
காசு...!

இப்படி
விலைவாசி
எகிறியடிக்கையில்
பஞ்சப்படி
படுத்துறங்கும்
ஊதிய உயர்வும்
மறுத்து நிற்கும்
செலவினங்கள்
கூடி வரும்
வரவினங்கள்
கவிழ்ந்தே கிடக்கும்...

இதுதான்
எங்கள் வாழ்க்கையென
எவருக்கிங்கு புரியும்...?

# ஏழு முனை பிரச்சார இயக்கம்

**திண்டுக்கல்**

*திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக 23.6.22 காலை 8.00 மணிக்கு துவங்கி மாலை 7.00 மணிவரை ஏழுமுனை பிரச்சார ஊழியர் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது இதில் மாநில பொதுச்செயலாளர் செல்வம் மாநில துணைத்தலைவர் செல்வராணி மாநில செயலாளர் அண்ணா குபேரன் ஆகிய தலைவர்கள் குழுவுடன் மாவட்ட தலைவர் முபாரக் அலி செயலாளர் விவேகானந்தன் பொருளாளர் குப்புசாமி மாவட்ட துணைத்தலைவர் கள் ராஜமாணிக்கம், பிச்சை வேல், வல்லவன், ஜெயபால் வருவாய் துறை அலுவலர்கள் சங்க தலைவர்கள் விஜயராகவன், ரவிச்சந்திரன், அக்பர் சத்துணவு ஊழியர் சங்க தலைவர்கள் மணிக்காளை, ஜெசி, முருகவள்ளி சாலை பணியாளர் சங்க தலைவர்கள் ராஜா, பாண்டி, முருகேசன் மருத்துவத்துறை தலைவர்கள் அந்தோணி ஜெயராஜ், பாப்பு லெட் பட்டு வளர்ச்சி துறை முருகன் மற்றும் கூட்டுறவு துறை தலைவர்கள் கொண்ட குழு சென்றது திண்டுக்கல் தலைமை மருத்துவமனை முன்பு மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் மாநில துணைத்தலைவர் செல்வராணி சிறப்புரை ஆற்றினார் வட்ட பொருளாளர் அந்தோணி ஜெயராஜ் நன்றி கூறினார் நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட துணைத்தலைவர் சுகந்தி தலைமையில் மாநில செயலாளர் அண்ணா குபேரன் சிறப்புரையாற்றினார் வட்ட தலைவர் பச்சை முத்து நன்றி கூறினார் வேடசந்தூர் தாலுகா அலுவலகத்தில் மாவட்ட இணைச்செயலாளர் ஜெயபால் தலைமையில் மாநில செயலாளர் அண்ணா குபேரன் சிறப்புரையாற்றினார் வட்ட செயலாளர் நந்த கோபால் நன்றி கூறினார் மாவட்ட கருவூலம் முன்பாக மாவட்ட துணைத்தலைவர் ராஜமாணிக்கம் தலைமையில் மாநில துணைத்தலைவர் செல்வராணி சிறப்புரை ஆற்றினார் கருவூல கணக்குதுறை அலுவலர் சங்க மாநில செயலாளர் சிக்கந்தர் நன்றி கூறினார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் மாநில பொதுச்செயலாளர் செல்வம் சிறப்புரை ஆற்றினார் வட்ட செயலாளர் ராஜாமணி நன்றி கூறினார் திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் விவேகானந்தன் தலைமையில் மாநில துணைத்தலைவர் செல்வராணி சிறப்புரை ஆற்றினார் வட்ட தலைவர் அக்பர் நன்றி கூறினார் ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் ஜெசி தலைமையில் மாநில துணைத்தலைவர் செல்வராணி சிறப்புரை ஆற்றினார் மாவட்ட இணைச்செயலாளர் ராஜாத்தி நன்றி கூறினார் ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகத்தில் மாவட்ட இணைச்செயலாளர் மகாராஜா தலைமையில் மாநில செயலாளர் அண்ணா குபேரன் சிறப்புரையாற்றினார் வட்ட செயலாளர் மணிமாறன் நன்றி கூறினார் பழனி தாலுகா அலுவலகத்தில் மாவட்ட இணைச்செயலாளர் பிச்சை வேல் தலைமையில் மாநில பொதுச்செயலாளர் செல்வம் சிறப்புரை ஆற்றினார் வட்ட தலைவர் ராமசாமி நன்றி கூறினார் இந்த பிரச்சார இயக்கம் மிகவும் சிறப்பாக அமைந்தது.*

**திருவாரூர்**

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவின்படி திருவாரூர் மாவட்டத்தில் ஊழியர் சந்திப்பு பிரச்சாரம் இயக்கம் கடந்த 21.6.22 அன்று திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டாட்சிர்*

அலுவலக வளாகத்தில் மாவட்ட தலைவர் தோழர்.வெ.சோமசுந்தரம் தலைமையில் துவங்கியது.மாவட்ட செயலாளர் தோழர். செ.பிரகாஷ் பிரச்சாரத்தின் நோக்கம் குறித்து விரிவாக உரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் தோழர் டி.மணிவன்னண் அனைவரையும் முறையாக வரவேற்றார். பிரச்சார இயக்கத்தினை TNGEA முன்னாள் மாநில செயலாளர் தோழர்.எம். சௌந்தர்ராஜன் துவங்கிவைத்தார். TNGEA மாநில துணைத் தலைவர் தோழர்.ஏ.பெரியசாமி மற்றும் மாநில செயலாளர் தோழர் டானியல் ஜெயசிங் ஆகியோர் ஊழியர்கள் படும் இன்னல்கள் தொடர்பாகவும், ஆட்சியாளர்கள் நமக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாதது தொடர்பாகவும் விளக்கவுரை ஆற்றினர். இறுதியாக ஜாக்டோ- ஜியோ போராளியும், த.நா.அரசு அனைத்து ஓய்வூதியர் சங்க நிர்வாகியுமான தோழர்.கே.வேதரெத்தினம் நிறைவுரை ஆற்றினார். வட்ட செயலாளர் தோழர். கோபிசரவணன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மன்னார்குடியில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்கு முன்பாக நடைபெற்ற பிரச்சாரத்திற்கு மாவட்ட தலைவர் தோழர். வெ.சோமசுந்தரம் தலைமை தாங்கினார். TNGEA. முன்னாள் மாநில துணைத்தலைவர் தோழர்.கே.அகோரம் துவக்கி வைத்தார். வட்ட தலைவர்.தோழர்.ஏ.வி.சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்று பேசினார். மாநில துணைத்தலைவர் தோழர்.ஏ.பெரியசாமி ஒரு சிறப்பானதொரு எழுச்சியுரை ஆற்றினார். இறுதியாக வட்ட செயலாளர் தோழர்.ஆர்.செந்தில்ராஜன் நன்றி கூறினார்..முன்னதாக மாநில நிர்வாகிகளுக்கு வட்டகிளை தோழர்களால் பொன்னாடை அணிவித்து மறியாதை செய்து வரவேற்றனர்.

நீடாமங்கலத்தில் நடைபெற்ற ஊழியர் சந்திப்பு இயக்கத்திற்கு மாவட்ட தலைவர் தோழர்.வெ.சோமசுந்தரம் தலைமை தாங்கினார். வட்டகிளை தலைவர் தோழர்.ஏ.லதா வரவேற்புரை நிகழ்த்தினார். மாநில துணைத்தலைவர் தோழர்.ஏ.பெரியசாமி ஊழியர் சந்திப்பு இயக்கத்தின் நோக்கம் குறித்து விளக்கவுரை நிகழ்த்தினார். முன்னதாக மாநில நிர்வாகிகள் இருவருக்கும் பொன்னாடை அணிவித்து மறியாதை செய்யப்பட்டது. திருவாரூரில் தடைபெற்ற ஊழியர் சந்திப்பு இயக்கத்திற்கு செயலாளர் தோழர்.வெ.சோமசுந்தரம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் தோழர்.செ.பிரகாஷ் வரவேற்புரை நிகத்தினார். த.நா.அரசு அனைத்து மருந்தாளுனர் சங்க மாநில பொதுச்செயலாளர் தோழர்.உ.சண்முகம் துவக்கவுரை ஆற்றினார். மாநில செயலாளர் தோழர் டானியல் ஜெயசிங் ஊழியர் சந்திப்பு இயக்கம் குறித்தான கருத்துரையினை வெகு சிறப்பாக எடுத்துரைத்தார். மாநில துணைத்தலைவர் தோழர்.ஏ.பெரியசாமி கோரிக்கைகளின்பால் அரசின் மெத்தன போக்கை எடுத்துரைத்தார். முன்னதாக மாநில நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து மறியாதை செய்யப்பட்டது. இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர்.செ.செங்குட்டுவன் நன்றி கூறினார்.

இந்த பிரச்சார நிகழ்வில் 128 ஆண்களும், 67 பெண்களுமாக, 195 தோழர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். ஊழியர் சந்திப்பு இயக்கத்தில் மாவட்ட துணைத்தலைவர் தோழர்.வி. தெட்சிணாமூர்த்தி, மாவட்ட இணைச்செயலாளர்கள் தோழர்.கே. பாலசுப்பிரமணியன், டி.ராஜசேகரன், பி. மகாலிங்கம், பி.விஜயன்,மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.டி. தமிழ்சுடர் ஆகியோர் கலந்துக்கொண்டனர். தோழமையுடன், மாவட்ட செயலாளர் TNGEA, திருவாரூர் மாவட்டம்.

**கரூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தமிழகத்தின் ஏழு முனைகளிலிருந்து நடைபெற்று வரும் ஊழியர் சந்திப்பு பிரச்சாரப் பயணக்குழுவின் ராமேஸ்வரம்

மண்டல வாகனம் 24.06.2022 அன்று கரூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட வளாகங்களில் பிரச்சார இயக்கம் சிறப்புற நடைபெற்றது. அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம் காலை 10.30 மணி முதல்11.00வரை க. பரமத்தி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 11.30 மணி முதல் 12மணி வரை கரூர் வட்டாட்சியர் அலுவலகம் 12.30முதல்1மணி வரை கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை 1.30 மணி முதல் 2.00மணி வரை கரூர் மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகம் 3.00 மணி முதல் 3.30வரை கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியர் அலுவலகம் 4.00 மணி முதல் 4.30வரை குளித்தலை வட்டாட்சியர் அலுவலகம் 5.00மணி முதல் 5.30 வரை நடைபெற்றது.

**விருதுநகர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தமிழகத்தின் ஏழு முனைகளிலிருந்து நடைபெற்று வரும் ஊழியர் சந்திப்பு பிரச்சாரப் பயணக்குழுவின் கலியக்கவிளை மண்டல வாகனம் 23.06.2022 விருதுநகர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட வளாகங்களில் பிரச்சார இயக்கம் சிறப்புற நடைபெற்றது. இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திருவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் பிரச்சார இயக்கம் சிறப்பாக நடைபெற்றது.

**மதுரை**

அன்புத் தோழர்களே வணக்கம்! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயற்குழு முடிவின்படி.மதுரையில் 22/06/2022 புதன்கிழமை காலை 10.30மணிக்கு தத்தனேரி ESI மருத்துவமனையில் தொடங்கி பொதுப்பணித்துறை தல்லாகுளம். நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தாமரைத்தொட்டி). தொழிற்பயிற்சி நிலையம்.... அரசு அச்சகம்.... மதுரை மாநகராட்சி மதுரை மருத்துவக்கல்லூரி.... சம்பளக்கணக்கு அலுவலகம். கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் அலுவலகம்...ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திருப்பரங்குன்றம்... மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மேலூர் வட்டாட்சியர் அலுவலகம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், செல்லம்பட்டி கோட்டாட்சியர் அலுவலகம் உசிலம்பட்டி மாநில மையம் சார்பில் தோழர்கள் ஆ. செல்வம், பொதுச்செயலாளர், அ.குபேரன், மாநிலச்செயலாளர், செல்வராணி, மாநிலத்துணைத்தலைவர் ஆகியோர் பங்கேற்றார்கள். மாவட்டத்தலைவர் ஜெ. மூர்த்தி, மாவட்டச்செயலாளர் க.நீதிராஜா, மாவட்டப்பொருளாளர் மு.ராம்தாஸ், மாவட்ட,வட்டக்கிளை முன்னணி ஊழியர்கள் மற்றும் துறைச்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டனர். தோழமையுடன் க.நீதிராஜா மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் - மதுரை (237/84)

**நாகப்பட்டினம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி மாண்புமிகு தமிழக முதல்வரின் தேர்தல்கால வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி ஏழுமுனை ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம் 20.06.2022 முதல் 24.06.2022 முடிய தமிழ்நாடு முழுவதும் துவங்கி நடைபெற்று வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் முதல் நாள் துவங்கிய பிரச்சார இயக்கம் இரண்டாவது நாள் திருவாரூர் மாவட்டத்திலும், மூன்றாவது நாளான இன்று (22.06.2022) காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் தோழர் R.சிவபழனி தலைமையில் மாநில துணைத் தலைவர் தோழர் A.பெரியசாமி, மாநில செயலாளர் தோழர் S.டானியல் ஜெயசிங் மற்றும் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் R.கலா ஆகியோர் பிரச்சாரத்தை துவங்கி மயிலாடுதுறை இந்து சமய அறநிலையத்துறை, வணிகவரித்துறை,

ஊராட்சி ஒன்றியம், வருவாய் கோட்ட அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், சீர்காழி நெடுஞ்சாலை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகங்களில் பிரச்சாரம் மேற்கொண்டு பிரச்சாரத்தை மாலை சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நிறைவு செய்தனர். பிரச்சார பயணத்தில் கலந்துகொண்ட மாவட்ட/ வட்ட நிர்வாகிகளுக்கும், வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட துறைவாரி சங்க தோழர்களுக்கும் மாவட்ட மையத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**கடலூர்**

வணக்கம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி ஜீன் 20-24 ஏழுமுனை பிரச்சார இயக்கம் கடலூர் மாவட்டத்தில் 23.06.2022 அன்று மாநில துணை தலைவர் தோழர் ஆ. பெரியசாமி மற்றும் மாநில செயலாளர் தோழர் சா.டானியல் ஜெயசிங் அவர்களின் தலைமையிலான வேதாரண்யத்தில் துவங்கிய பிரச்சார ஊழியர் சந்திப்பு இயக்கம் காலை 10.00 மணிக்கு கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் சிதம்பரத்தில் பொதுப்பணி துறை அலுவலகம் முன்பாக மாவட்ட தலைவர் D. இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது மாநில துணை தலைவர் தோழர் ஆ.பெரியசாமி சிறப்புரையாற்றினார்.வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர் சா. டானியல் ஜெயசிங் சிறப்புரையாற்றினார் அடுத்து புவனகிரி வட்டம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாநில துணை தலைவர் ஆ.பெரியசாமி சிறப்புரை யாற்றினார். மதியம் 2.00 மணிக்கு விருத்தாசலம் வட்டம் சார் ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாநில துணைதலைவர் ஆ.பெரியசாமி சிறப்புரையாற்றினார்.குறிஞ்சிப்பாடி வட்டம் வடலூரில் நகராட்சி அருவலம் முன்பாக 3.30 மணிக்கு நடைபெற்ற ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கத்தில் மாநில செயலாளர் தோழர் சா. டானியல் ஜெயசிங் சிறப்புரையாற்றினார் அடுத்து கடலூர் வட்டம் கடலூரில் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில் மாநில செயலாளர் தோழர் சா.டானியல் ஜெய்சிங் சிறப்புரையாற்றினார். இறுதியாக பண்ருட்டி வட்டம் நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலர் முன்பாக மாலை 5.45 க்கு நடைபெற்ற பிரச்சாரத்தில் மாநில துணை தலைவர் ஆ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். நடை பெற்ற ஊழியர் சந்திப்பு பிச்சார இயக்கத்தில் மாவட்ட தலைவர் D.இரவிச்சந்திரன், மாவட்ட செயலாளர் ட. அரிகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் S. வெங்கடேசன் மாவட்ட துணை தலைவர்கள் M.குமார், இராம.வெங்கடாஜலபதி, கு. கவியரசு, எம்.வீரமணி மாவட்ட இணை செயலாளர்கள் S. பாலகிருஷ்ணன், ஆர். தமிழ்செல்வன், கே.ரவி மற்றும் அனைத்து வட்டக் கிளை நிர்வாகிகள் சிதம்பரம் தலைவர் குலோத்துங்கள், செயலாளர் G. பானுகோபன் பொருளாளர் S. பாபு புவனகிரி செயலாளர் தோழர் எட்வின்ராஜ், பொருளாளர் E.பிரகாஷ் விருத்தாசலம் தலைவர் என்.பன்னீர்செல்வன், செயலாளர் A.லெனின், குறிஞ்சிப்பாடி பி.பக்தா வாசலம் கடலூர் தலைவர் வி. சிவப்பிரகாசம் செயலாளர் என்.ராமர் பண்ருட்டி தலைவர் P மணி செயலாளர் கே.செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள் பிரச்சார இயக்கத்தை வாழ்த்தி சிதம்பரத்தில் வட்ட செயலாளர் K.N.பன்னீர்செல்வம் மற்றும் T.மகாலிங்கம் கடலூரில் ஓய்வூதியர் கூட்டமைப்பு தலைவர் T. புருசோத்தமன், மாவட்ட தலைவர் என். காசிநாதன், மாவட்ட துணை தலைவர்

எஸ்.கருணாகரன் பேசினார்கள். இந்த பிரச்சார இயக்கத்தில் முன்னணி நிர்வாகிகளும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். 9 வட்டக் கிளைகளில் 6 வட்டத்தில் 7 இடங்களில் ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

**கிருஷ்ணகிரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு, மாண்புமிகு தமிழக முதல்வர் அரசு ஊழியர்களுக்கு கொடுத்த தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி தமிழகத்தின் ஏழு முனைகளிலிருந்து 20.06.2022 முதல் 24.06.2022 வரை ஊழியர் சந்திப்பு மற்றும் பிரச்சார இயக்கம் நடத்துவது என்று முடிவெடுத்தது. அதன்படி 20.06.2022 அன்று தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் ஊழியர் சந்திப்பு மற்றும் பிரச்சார பயணம் துவங்கியது.

இரண்டாம் நாள் 21.06.2022 அன்று கிருட்டினகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் காலை 10.00 மணிக்கு பிரச்சார இயக்கத்தை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் தோழர் எஸ்.ஜி.குருநாதன் அவர்கள் துவக்கி வைத்தார். சாலை ஆய்வாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் எஸ்.முருகேசன் வாழ்த்துரை வழங்கினார்.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தல்கால வாக்குறுதிகளை காலம் தாழ்த்தாமல் உடனே நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி சிறப்புரையாற்றினார். தேன்கனிக்கோட்டை வட்டக் கிளை சார்பாக ரூ5,000/-, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் ரூ 5,000/-, அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பில் ரூ 1,000/- பிரச்சார இயக்க நிதியாக வழங்கப்பட்டது. கிளை சார்பாக மாநில நிர்வாகிகளிடம் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இதில் 18 பெண் ஊழியர்கள் உட்பட 69 பேர் கலந்துகொண்டனர். அதையடுத்து, 11.00 மணிக்கு, கொடிகள் பிடித்தபடி இரு சக்கர வாகன அணி வகுப்புடன் பயணக்குழுவிற்கு ஒசூரில் வரவேற்பு அளிக்கப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் துணைப் பொதுச்செயலாளர்கள் தோழர் ஆர். மங்களபாண்டியன் அவர்களும் தோழர் தெ.வாசுகி அவர்களும் சிறப்புரையாற்றினர். ஒசூர்வட்டக் கிளை சார்பாக ரூ 5,000/- இயக்க நிதியாகவும், சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட இணைச்செயலாளர் தோழர் என்.ராதா மாநில மகளிர் மாநாட்டு நன்கொடையாக ரூ 5,000/-மும், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக தோழர் கோவிந்தராஜ் ரூ 2,000/- இயக்க நிதியாகவும் வழங்கினர். இயக்கத்தில் 30 பெண் ஊழியர்கள் உட்பட 95 பேர் கலந்துகொண்டனர்.

அடுத்ததாக, 12.30 மணிக்கு இருசக்கர வாகன அணிவகுப்புடன் சூளகிரியில் பிரச்சார பயணக்குழுவிற்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் துணைப்பொதுச்செயலாளர் தோழர் ஆர். மங்களபாண்டியன் சிறப்புரையாற்றினார். சூளகிரி வட்டக் கிளை சார்பாக ரூ 20,000/- இயக்க நன்கொடையாக வழங்கப்பட்டது. இங்கு 87 பெண் ஊழியர்கள் உட்பட 148 பேர் கலந்துகொண்டனர்.

பிற்பகல் 01.45 மணிக்கு கிருட்டினகிரி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் பயணக்குழு பிரச்சாரத்தை தொடர்ந்தது. மாநில தலைவர் தோழர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். சுட்டெரிக்கும் வெயிலிலும் ஊழியர்கள் பிரச்சார இயக்கத்தில் இறுதி வரை பங்கேற்றனர். கிருட்டினகிரி வட்டக்கிளை சார்பாக ரூ5,000/- பிரச்சார இயக்க நன்கொடை வழங்கப்பட்டது. இதில் 27 பெண்

ஊழியர்கள் உட்பட 94 பேர் கலந்துகொண்டனர். உணவு இடைவேளைக்குப் பின் 03.15 மணிக்கு கிருட்டினகிரி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் துணைப்பொதுச்செயலாளர்கள் தோழர் ஆர். மங்களபாண்டியன், தோழர் தெ.வாசுகி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் சார்பில் ரூ 3,000/- ஊழியர் சந்திப்பு இயக்க நிதியாக வழங்கப்பட்டது. இதில் 28 பெண்கள் உட்பட 82 பேர் கலந்துகொண்டனர்.

மாலை 05.30 மணிக்கு ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் ஊழியர் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது. துணைப்பொதுச்செயலாளர் தோழர் ஆர். மங்களபாண்டியன் அவர்களும், மாநில தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்களும் சிறப்புரையாற்றினர். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் ரூ 500/- பிரச்சார இயக்க நிதியாக வழங்கப்பட்டது. ஊத்தங்கரை வட்டக் கிளை சார்பில் மாநில நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து புத்தகங்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன. இதில் 38 பெண் ஊழியர்கள் உட்பட 92 பேர் கலந்துகொண்டனர்.

இறுதியாக, 2022, ஜூலை 09, 10 ஆகிய நாட்களில் தூத்துக்குடியில் நடைபெற உள்ள அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய செயற்குழு கூட்டத்திற்கான நன்கொடையாக ரூ 10,000/- அய் கிருட்டினகிரி மாவட்ட மையத்தின் சார்பில் மாநில நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டது.

**திருச்சிராப்பள்ளி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சேலத்தில் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவின்படி தமிழகத்தின் 7 முனைகளிலிருந்து ஊழியர் சந்திப்பு மற்றும் பிரச்சார இயக்கம் 20.06.2022 முதல் 24.06.2022 வரை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி 20.06.2022 அன்று புதுக்கோட்டையில் இருந்து துவங்கி இரண்டாம் நாளான 21.06.2002 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை, அரசு தொழில் பயிற்சி நிலையம் திருவெறும்பூர், அரசு அச்சகம் துவாக்குடி, வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் திருவெறும்பூர், நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் அலுவலகம், மாவட்ட நீதிமன்ற வளாகம், பழைய மாவட்ட ஆட்சியர் வளாகம், இணை இயக்குநர் வேளாண்மை துறை அலுவலகம், பல்துறை கட்டட வளாகம் மன்னார்புரம், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் மணச்சநல்லூர், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் துறையூர் ஆகிய 11இடங்களில் மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர்கள் தோழர் ச. ஹேமலதா, தோழர் ஆ. அம்சராஜ் ஆகியோர் கோரிக்கை விளக்க பிரச்சார உரையாற்றினார்கள். குறிப்பாக புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி எம்ஆர்பி செவிலியர்கள் ஊர் புற நூலகர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியத்தில் உள்ளவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், அகவிலைப்படி, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, சாலை பணியாளர்கள் 41மாத பணி நீக்க காலத்தை பணி வரன்முறை பண்படுத்த வேண்டும், 4.50 லட்சம் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும், ஒப்பந்த முறையில் வேலை நியமனம், அத்துக்கூலி மற்றும் அவுட் சோர்சிங் முறையை கைவிட்டு முறையான கால முறை ஊதியம் பணி நியமனம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பிரச்சாரம் செய்யப்பட்டது.

மாவட்ட செயலாளர் தோழர் பழனிச்சாமி, மாவட்ட துணைத் தலைவர்கள் தோழர் சகாதேவன், ஜீவானந்தம், மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர் பாபு, முருகானந்தம், அமுதவல்லி, அல்போன்சா, மாநில செயற்குழு உறுப்பினர் ராம்ராஜ், துறைவாரி சங்க நிர்வாகிகள் தோழர்கள் ஆனந்த லட்சுமி, கலையரசி, ராஜா, பூமாலை, அப்துல் மஜீத், குமரேசன், ரெங்கசாமி, சவரிராஜ், ராமச்சந்திரன், கருணாநிதி, மாரிக்கண்ணு, வரதராஜன் வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வட்டக்கிளை நிர்வாகிகள் தோழர்கள் சுரேஷ் பிரபு, மணிகண்டன், தினகரன், வினோத், இளங்கோவன், கிளாரா, ஜான் கென்னடி, பெரியசாமி மணிமாறன், மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் சாந்தி, மார்கெரட், மணிமாலா, டெய்சி லூர்து மேரி , வட்டக்கிளை நிர்வாகிகள், துறைவாரி தோழமை சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் மிக எழுச்சியோடு கலந்து கொண்டார்கள். மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ் நன்றி கூறினார்.

**தருமபுரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தருமபுரி மாவட்டம். தமிழ்நாட்டின் 7 - முனைகளில் இருந்து 20.06.2022 முதல் 24.06.2022 வரை ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம் துவங்கி நடைபெறுவதை ஒட்டி அதில் ஒரு முனை இயக்கமான தருமபுரி – ஒகேனக்கல்லிருந்து காலை 10.00 மணிக்கு ஒகேனக்கல் தமிழ்நாடு ஓட்டல் அருகே மாவட்ட செயலாளர் A.சேகர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பிரச்சார இயக்கத்தை மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்கள் கோரிக்கைகளை விளக்கி சிறப்பானதொரு பிரச்சார இயக்கத்தை எழுச்சியுடன் துவக்கிவைத்தார். முன்னதாக மேலதாளங்கள் முழங்க விண்ணதிர மாவட்ட பொருளாளர் K. புகழேந்தி அவர்கள் கோரிக்கைகள் குறித்து கோஷமிட்டார்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையின் மாநில துணைத் தலைவர் R. ஆறுமுகம் அவர்கள் வாழ்த்தி பேசினார். கோரிக்கைகள் குறித்து விளக்க சிறப்புரையாக மாநில துணை பொதுச்செயலாளர்கள் இரா. மங்கலபாண்டியன் அவர்களும்/ தெ. வாசுகி அவர்களும் உரையாற்றினார்கள் பெண்கள் – 17 ஆண்கள் - 24 பொதுமக்கள் உட்பட 60-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

தப்பாட்ட இசையுடன் மேளம் முழங்க பேரணியாக ஒகேனக்கல்லிருந்து புறப்பட்டு பின்னர் வேன் மூலம் பிரச்சார பயணம் பென்னாகரத்தை அடைந்தது. பென்னாகரம் வட்டத்தை உள்ளடக்கி காலை 11.00 மணி அளவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் B. சந்திரன் அவர்கள் கோஷங்களை முழங்க மாவட்ட துணைத்தலைவர் P.S.இளவேனில் அவர்கள் தலைமை வகித்தார் இங்கு மாநில துணை பொதுச் செயலாளர்கள் தெ.வாசுகி மற்றும் இரா.மங்கல பாண்டியன் ஆகியோர் உரையாற்றினார்கள். கிளை சார்பில் ரூ 2000/= பிரச்சார பயண உதவியாக ரமேஷ் வட்ட துணைத்தலைவர் P.S. இளவேனில் மாவட்ட துணைத்தலைவர் ஆகியோர் வழங்கினர் இதில் 26 பெண்கள் 52 - ஆண்கள் பொதுமக்கள் என 150-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

ஒகேனக்கல் மற்றும் தருமபுரி பிரச்சார ஏற்பாடுகளை வட்டத் தலைவர் திம்மராயன் வட்ட செயலாளர வேலவன் உட்பட கிளை நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் செய்திருந்தனர். இதை தொடர்ந்து பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மதியம் 12.30 மணி அளவில் நடைபெற்ற பிரச்சார இயக்கத்திற்கு மாவட்டத் தலைவர் M.

சுருளிநாதன் அவர்கள் தலைமை ஏற்று உரையாற்றினார். மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்கள் கோரிக்கைகள் குறித்து சிறப்பு விளக்க உரையாற்றினார்.

இங்கு பாலக்கோடு கிளை சார்பாக ரூ15,000-த்தை மாவட்ட துணைத்தலைவர் S.குணசேகரன் அவர்களும் வட்டத் தலைவர் தமிழ் செல்வன் அவர்களும் மாநிலத் தலைவரிடம் வழங்கினார்கள் 28 பெண்கள் 42 ஆண்கள் பொதுமக்கள் என 120 -க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இங்கு பிரச்சார ஏற்பாடுகளை மாவட்டத் துணைத்தலைவர் S. குணசேகரன் வட்டத் தலைவர் தமிழ் செல்வன் மற்றும் வட்ட நிர்வாகிகள் முன்னணி ஊழியர்கள் செய்திருந்தனர். மதிய உணவையும் பொருட்படுத்தாமல் தருமபுரி ஆட்சியர் அலுவலகம் முன்பு ஊழியர்கள் வேன் பிரச்சார இயக்க பயணத்தில் காத்திருந்து மதியம் 02.10 மணி அளவில் நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில் கலந்துகொண்டனர். மாவட்ட செயலாளர் A.சேகர் அவர்கள் தலைமை ஏற்றார். இங்கு TNROA - வின் Ex.மாநில செயலாளர் S.வெங்கடேஸ்வரன் அவர்களும் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் R. நடராஜன் அவர்களும் மாநில துணை பொதுச் செயலாளர்கள் இரா.மங்கள பாண்டியன் அவர்களும் தெ.வாசுகி அவர்களும் TAMSA சார்பில் மாவட்ட நிர்வாகிகள் R. ஜெயவேல் ரேகா மற்றும் அண்ணாதுரை ஆகியோர் ரூ 5000/= மும் TNHIA- சார்பில் நிர்வாகிகள் யாரப் பாஷா, சுதாகர் மற்றும் ஆனந்தன் ஆகியோர் ரூ 3000/-மும். TNPLO – சார்பில் நிர்வாகிகள் M.முனிராஜ், P.பிரபாகரன், T.சண்முகம், M.குமரன் ஆகியோர் ரூ 2000/-மும் மாநிலத் தலைவரிடம் வழங்கினார்கள். நிதி உதவிகளை பெற்றுக் கொண்டு மாநிலத் தலைவர் மு.அன்பரசு அவர்கள் கோரிக்கை விளக்க சிறப்புரையாற்றினார். இதில் பெண்கள் 35 ஆண்கள் – 52 என 100 -க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

மதியம் 03.00 மணி அளவில் மதிய உணவுக்குப் பின் ஏற்கனவே திட்டமிட்டபடி 03.00 மணிக்கு பாப்பிரெட்டிப் பட்டியில் இருக்க வேண்டும் மாறாக காலதாமதமானதால் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியை ரத்து செய்து விட்டு அரூர் வட்டத்தில் 05.00 மணி அளவில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில் மாநில துணை பொதுச் செயலாளர் இரா. மங்கல பாண்டியன் அவர்கள் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். இதில் 22 பெண்கள் 40 ஆண்கள் பொதுமக்கள் உட்பட 100-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

தருமபுரி மாவட்டத்தில் இறுதியாக மாலை 06.15 மணி அளவில் காரிமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்டத் தலைவர் M.சுருளிநாதன் அவர்கள் தலைமையில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் எழுச்சிகரமாக நடைபெற்ற ஊழியர் சந்திப்பு கோரிக்கை விளக்க பிரச்சார இயக்கத்தை பாராட்டி வாழ்த்தி கோரிக்கைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். இதில் பெண்கள் 22 ஆண்கள் 35 பொதுமக்கள் உட்பட 60-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இவ்வியக்கங்களில் அனைத்து வகையிலும் பங்கேற்று சிறப்பித்த வட்ட மாவட்ட மாநில தோழமை சங்க பொறுப்பாளர்கள் முன்னணி ஊழியர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டாட்சியர்கள் கூட்டுறவு சார்பதிவாளர்கள் துணை வட்டார வளர்ச்சி மற்றும் வருவாய் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் குறிப்பாக வேன் பிரச்சார இயக்கத்திற்கு வேனுக்கான பேனர் வடிவமைப்பை மாவட்ட துணைத்தலைவர் S. குணசேகரன் மற்றும் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

●

கவிதை

# எழு... எழு... எழுச்சியாய்

- புதுக்கோட்டை ரெங்கசாமி

காற்றின்
திசை வழியில்
பயணிக்கும் படகு
கரை போய் சேரும்!

பாதையறிந்து
பயணிக்கும் பயணம்
ஊர் போய் சேரும்!

நம் கூற்றின்
வழிப் பயணம்
திசைகள் எட்டும்!

எட்டிய திசையில்
எழுந்து நடந்தால்
தீர்வு கிட்டும்!

இருபதாண்டு
எழுச்சி பயணம்..
உணர்ச்சி ததும்பும்
உன்னதப் பயணம்!

மறுக்கப்பட்ட
பறிக்கப்பட்ட
உரிமை மீட்க
முழுக்கமிட்ட
சங்கப் பயணம்!

குதிரைப்படை
குண்டர் படை
சிறை வாசம்
வேலையிழப்பு
ஊதியமிழப்பு....ஏன்?
உயிரிழப்பு!

எல்லாம் கடந்து
எஸ்மா....டெஸ்மாவை
எதிர்கொண்டு
உரிமை மீட்ட பயணம்!

விழுந்து விழுந்து
எழுந்தெலும்
சமர் புரியும்
சரித்திரம் படைக்கும்
நம் பயணம்!

ஆம்
பயணங்கள் முடிவதில்லை
இழந்ததை
மீட்கும் பயணம்
இருப்பதை
காக்க பயணம்!

எழு...எழு... எழுச்சியாய் எழு
எண்ணம்
ஈடேரும் வரை எழு!

தொடர் எழுச்சியும்
தொடர் முயற்சியும்
துணிவு தரும்
துயர் துடைக்கும்!

கேட்கும்
கேட்காதது போல்
அறிந்தும்
அறியாதது போல்

மௌனிகளாய் இருக்கும்
மௌனத்தை கலைக்க...
நம் மௌனம் கலைப்போம்!

காது கிழிய
வீதி அதிர
கோட்டை வியக்க
மனக் குமுறலை
குரலால் எழுப்பு...

விழிக்கட்டும் அரசு!
விடியல் பிறக்கட்டும்.

விமர்சனம்

# இணைந்து வாழ்தல் லிவிங்- டு கெதர்

- ஞானகுரு

இம்மாத அரசு ஊழியர் இதழில் தோழர் ஜி.ஜி, அரசு ஊழியர் இணைந்து வாழ்தலில் உள்ள சட்டச் சிக்கல் குறித்த கட்டுரையைப் படித்தேன். நல்ல நோக்கை மனதில் கொண்டு எழுதியுள்ளார். நல்ல முயற்சி. அது சில கேள்விகளை எழுப்புகிறது.

1)ஒரு தொழிற்சங்கம் எப்படிப் பார்க்கவேண்டும்?

2)இணைந்து வாழ்தல் சமூக இழுக்கா?

3)இவர்களுக்கான சட்ட உரிமைகளைப் பெற இந்த சமூகத்திற்கு பொறுப்பு இல்லையா என்ற பல கேள்விகளை எழுப்புகிறது. பழைய நிலப்பிரபுத்துவ சிந்தனைகளிலிருந்து இதனை அணுகுவதுபோன்ற தோற்றம் இருக்கிறது. மேலைநாடுகளில் பெரும்பாலும் இணைந்து வாழ்தல் சிறப்பாக உள்ளது. ஒருவரையொருவர் புரிந்து கொள்வதாக இருக்கிறது. பெரும்பாலும் எல்லைமீறிய உறவாக இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட காலம்வரை இணைந்து வாழ்கிறார்கள். தங்களது வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும். தங்களுடைய வருமானம், வேலைமுறை, குடும்ப நிலை ஆகியவற்றை அவர்களுக்குள் புரிதலை ஏற்படுத்திக் கொண்டு திருமணம் செய்து கொள்கிறார்கள். நான் போலந்தில் இருந்தபோது எனது மகனின் நண்பரின் தம்பி இவரது வீட்டிலேயே காதலியுடன் ஒரு அறையில் தங்கி காதலர்களாக இணைந்து வாழ்ந்ததை கண்டுள்ளேன். அவர்கள் திருமணத்திற்குமுன் குழந்தை என்ற கேள்வி எழவில்லை.

நமது நாட்டிலும் ஓராண்டு ஈராண்டு காதல் செய்து பெற்றோர் சம்மதம் பெற்று நடக்கும் திருமணங்களும் உண்டு. பெற்றோர் சம்மதம் இல்லாமலும் நடக்கும் திருமணங்களும் உண்டு. இவையெல்லாம் இணைந்து வாழ்தலில் அடங்கும். இணைந்து வாழ்தலில் சட்டரீதியான உரிமை கிடைக்கும்வரை எல்லைமீறிய உறவுகளைத் தவிருங்கள் என்ற ஆலோசனை முக்கியம். ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வது அவசியம் என்ற கருத்து பரவலாக்கப்பட வேண்டும். அரசு ஊழியர்களும் விதிவிலக்கல்ல. ●

# திருவாசகர்

நீங்க ஒரு வாசகம் சொன்னாலும் அது திருவாசகம் தான்!

அட்டைப்பட கார்ட்டூன் அரசு ஊழியர்களின் தொடர் முயற்சிகளை போராட்டங்களை அருமையாக எடுத்துக்காட்டியது.

**- கோபிநாத், தென்துறைப்பூண்டி**

தலைவர் மடல், பொதுச்செயலாளர் மேசை அரசு ஊழியர்கள் போராட்டக்களத்திற்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் போராடாமல் எதுவும் கிடைக்கப்போவதுமில்லை என்பதையும் தெளிவாக உணர்த்தின.

**- சுஜாதா ராமலிங்கம், பட்டிவீரன்பட்டி**

தோழர் என்.எல்.எஸ். அவர்களுடன் கலந்துரையாடல் நல்லதொரு முயற்சி. முன்னாள் மாநில நிர்வாகிகளின் அனுபவம் இன்றைய ஒவ்வொரு அரசு ஊழியரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று. இது தொடரட்டும்.

**- பி.கணேசன், பெரியபாளையம்**

லிவிங் டுகெதர் அரசு ஊழியர்கள் குறிப்பாக பெண் அரசு ஊழியர்களுக்கு விழிப்புணர்வை தரக்கூடிய கட்டுரை.

**- பா.ஜெயவேல், செங்கல்பட்டு**

அரசியல்வாதிகள் சொன்ன பிரபலமான வார்த்தைகளை வைத்து அதே சமயம் அரசியல் கலப்பில்லாதா கதை பட்டின பிரவேசத்தில் நல்ல மெசேஞ் இருந்தது. ஒரு விண்ணப்பம். நீங்கள் அளிக்கும் தலைப்பு எந்த அரசியல்வாதியால் எதற்காக சொல்லப்பட்டது என்ற சிறு குறிப்புடன் கதைகளை இனிமேல் வெளியிடக் கோருகிறேன். எல்லாருக்கும் அரசியல் சம்பவங்கள் ஞாபகம் இருப்பது கடினம்.

**- முத்துவேல் ராஜா, ஆவடி**

மௌனம் கலையட்டும் மாண்புமிகு முதல்வரே நெத்தியடி. ஆனால் இன்னும் முதல்வரின் மௌனம் கலையவில்லை என்பது கவலைக்குரியது.

**- சு. சந்தான கிருஷ்ணன், ஒத்தக்கடை மதுரை.**

பாதுகாக்கப்பட வேண்டிய பாதுகாப்புத்துறை மத்திய அரசின் தனியார் மயப் போக்கையும் கார்ப்பரேட் கொள்கைகளையும் டார்ச் லைட் அடித்துக்காட்டியது. தோழர் மங்களபாண்டியன் அவர்களுக்கு ஒரு சபாஷ்.

**- நா .சதீஷ்குமார், நாகப்பட்டினம்**

சூடா ஒரு கோப்பை, பஞ்ச் மொராப்பா, கார்ட்டூன், பெரணமல்லுhர் சேகரனின் கவிதை போன்றவை ஜுன்மாத அரசு ஊழியரை இன்னும் அழகாக்கி காட்டின.

**- திவ்விய தர்ஷிணி, திருச்சி மலைக்கோட்டை**

கட்டுரை



# முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் முன்னத்தி ஏர் தோழர் கு.சின்னப்ப பாரதி

- மனோஹரி

முற்போக்கு தமிழ் மரபின் முன்னத்தி ஏர்களில் ஒருவரும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்- கலைஞர்கள் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும், கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும், செம்மலர் இலக்கிய மாத இதழின் நிறுவனருமான தோழர் கு.சின்னப்ப பாரதி, நாமக்கல்லில் ஜூன் 13 அன்று காலமானார். செம்மலர் மாத இதழில் எழுதிக்கொண்டிருந்த எழுத்தாளர்கள் தான் மதுரையில் மோட்டார் யூனியன் அலுவலகத்தில் கூடி தமுஎச என்கிற அமைப்பைத் தொடங்கினார்கள். செம்மலர் மாத ஏட்டினைத் தன் சொந்தச் செலவில் உருவாக்கி நடத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிடம் ஒப்படைத்தவர் தோழர் கு.சின்னப்ப பாரதி.

எழுத்தாளர் சங்கம் துவக்கப்பட்ட நாள் முதல் அவர் காலமான நாள் வரை சங்கத்தின் தலைவர்களில் ஒருவராக கொள்கைப்பிடிப்புடன் வாழ்ந்தார். இடதுசாரி இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான அவரது முதல் நாவலான "தாகம்" வர்க்கப்போராட்டத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாவல்களின் வரிசையில் முன்னிற்பதாகும். தாகத்தைத் தொடர்ந்து அவரது சங்கம், சர்க்கரை, பவளாயி, தலைமுறை மாற்றம், சுரங்கம், பாலைநில ரோஜா ஆகிய நாவல்கள் அடுத்தடுத்து வந்தன. கௌரவம், சின்னப்பபாரதி கதைகள் போன்ற சிறுகதைத்தொகுப்புகளும் சின்னப்பபாரதி கவிதைகள் தொகுப்பும் தெய்வமாகி நின்றாள் என்கிற நெடுங்கவிதையும் அவர் அளித்துள்ள எழுத்துக்கொடைகளாகும். கரும்பு விவசாயிகள் சங்கத்தை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவரான இவர் 1960களில் விவசாயிகள் சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றினார். தோழர் பி.சீனிவாசராவ் தலைமையில் நில உச்ச வரம்புக்காக கோவையிலிருந்து சென்னைக்குச் சென்ற நடைப்பயணக் குழுவில் இவரும் ஒருவராக நடந்துள்ளார். பி. சீனிவாசராவ், என்.சங்கரய்யா, ஆர்.கே. கண்ணன் போன்ற மார்க்சியத்தலைவர் களுடன் நெருக்கமான உறவு கொண்டிரு ந்தவர். அகில இந்திய அளவில் முற்போக்குப் படைப்பாளிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்கிற ஆசையில் அவர் ஆங்கி லத்தில் ILA Quarerly (Indian Literature and Art-quarterly) என்கிற காலாண்டு இலக்கிய இதழை ஆங்கிலத்தில் நடத்தினார். இது போன்ற முன்முயற்சிகளை இயக்கத்துக்காகச் செய்வதில் இறுதிவரை ஆர்வம் காட்டினார்.

இவருடைய படைப்புகள் இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராட்டி, குஜராத்தி, வங்காளி, ஆங்கிலம், பிரஞ்ச், டேனிஷ், சிங்களம், உஸ்பெக், சமஸ்கிருதம் ஆகிய 13 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சீனா, இலங்கை, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள இடதுசாரி எழுத்தாளர்களுடன் உரையாடல் நடத்தி தொடர்புகளை பேணியவர். இலக்கியச்சிந்தனை விருது, கலைஞர் பொற்கிழி விருது உள்ளிட்ட பல விருது களைப் பெற்றவர். அவருடைய நண்பர் களால் உருவாக்கப்பட்ட கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை வழியே பல படைப் பாளிகளுக்கும் சமூக சேவகர்களுக்கும் விருதுகள் வழங்கிட வழிவகுத்தவர். பிற்காலத்தில் அந்த அறக்கட்டளையின் நிதி முழுவதையும் தமுஎகசவிடம் ஒப்படைத்து இனி அமைப்பே இந்த விருதுகளை வழங்கும் படி செய்தார். இந்த நிதியிலிருந்தே முற்போக்குக் கலை இலக்கிய இயக்கத்துக்கு வாழ்நாள் பங்காற்றிய ஒருவருக்கு ஆண்டு தோறும் ரூபாய் ஒரு லட்சம் விருதாக தமுஎகச வழங்கி வருகிறது. ●

# ஆகஸ்ட் 23ல் ஆர்ப்பரிப்போம் கோட்டையை நோக்கிப் பேரணிக்கு தயாராவோம் சொன்ன சொல் காக்க முதல்வரை நேரில் கேட்போம்!

- தெ. வாசுகி

சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நம்முடைய கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை உணர்ந்தவராக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டங்களை ஆதரித்து போரட்டக் களங்களுக்கே நேரடியாக வந்து நமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்ததோடு நாம் நடத்திய மாநாட்டிலும் கலந்துகொண்டு அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் பிரச்சாரங்களும் செய்து திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியப் பங்காற்றினர். ஆனால் முதல்வராகி ஒன்றரை ஆண்டுகள் நெருங்கும் நிலையிலும் அவர், தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிபடி அரசு ஊழியர்களின் கோரிக்கைகளில் ஒன்றைக்கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு, அவற்றை செயல்படுத்த முடியாது என்பதை தன்னுடைய அமைச்சர் மூலமாக சட்டமன்றத்திலேயே நாசூக்காக தெரிவிக்க ஆரம்பித்திருப்பதன் மூலம் அரசு ஊழியர்கள் அவர் மீதும் திமுக ஆட்சியின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை சுக்குநாறாக்கியிருக்கிறார். மக்கள் புகழும் மாண்புமிகு முதல்வர் 90 சதவீத தேர்தல் வாக்குறதிகளை நிறைவேற்றி விட்டதாக கூறுகிறார். அவர் நமக்கு செய்வதாக கூறிய கீழ்க்கண்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளன.

**புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுதல்**

2003 ஆம் ஆண்டுமுதல் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் செலுத்திவரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்hக பத்து சதவீத ஊதியத்தை தமிழ்நாடு அரசு இதுவரை பங்களிப்பு ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்திடம் (PFRDA) கொடுக்கவில்லை. மேற்படி ஆணையத்தில் ஊழியர்களின் பங்களிப்பு மற்றும் அதற்கு இணையான அரசின் பங்களிப்பைச் சேர்த்து செலுத்தியுள்ள இராஜஸ்தான் போன்ற மாநிலங்களே இதைப்பொருத்து கவலை கொள்ளாமல் புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என்று அறிவித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ள நிலையில் தமிழக அரசின் நிலைப்பாடானது, அது தமிழக அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த விரும்பவில்லை என்பதையே காட்டுவதாக உள்ளது. இராஜஸ்தான் மாநிலத்தைத் தொடர்ந்து சத்தீஸ்கர் மாநிலத்திலும் காங்கிரஸ் தலைமையிலான மாநில அரசு பழைய ஓய்வூதித் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்தஇரண்டு மாநிலங்களைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி தெலுங்கானா, மத்திய பிரதேசம், கர்நாடகா மாநிலங்களில் நடைபெறவுள்ள மாநில சட்டசபை தேர்தல்களிலும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாக வழங்கவுள்ளது. மற்ற மாநில செயல்பாடுகள் இவ்வாறு உள்ள நிலையில் தமிழ்நாட்டில் முதல்வர் கொடுத்த வாக்குறுதிகளுக்கு எதிர்மறையான கருத்துக்களை மாண்புமிகு நிதியமைச்சர் சட்டமன்றத்தில் முதல்வரின் முன்னிலையிலேயே பேசியிருப்பது அரசு ஊழியர்களிடையே கொதிப்பான மனநிலையை ஏற்படுத்தியுள்ளது.

**ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படிஉயர்வை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதே உண்மையான சமூக நீதி.**

ஒன்றியஅரசு எத்தனை மக்கள்விரோத திட்டங்களையும் கொள்கைகளையும் அமல்படுத்தினாலும் அகவிலைப்படி உயர்வில் மட்டும் எந்தவித சமாதானமும் சொல்லாமல் அதன் ஊழியர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அகவிலைப்படியை அந்தந்த கால விலைவாசிக்கு ஏற்றபடி உயர்த்தி வழங்கி வருகிறது. அதன்படி 1.1.2022ஆம் தேதி முதல் ஒன்றிய அரசு ஊழியர்கள் 3 சதவீத அகவிலைப்படி உயர்வைப் பெற்றுள்ளனர். 1.7.2022 முதல் அடுத்த அகவிலைப்படி உயர்வு 4 சதவீதமாக அறிவிக்கப்படும் என்ற செய்திகளும் வந்த வண்ணமுள்ளன. ஆனால் தமிழ்நாடு அரசு மட்டும் இந்த அகவிலைப்படி உயர்வினைத் தராமல் இருப்பது சமூகநீதி கோட்பாட்டுக்கு எதிரானதாகும். நாட்டின் உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வுக்கேற்ப தீர்மானிக்கப்படும் இந்த அகவிலைப்படி, ஒன்றிய மாநில அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். இந்த அகவிலைப்படியை நிறுத்தி வைப்பது குறைத்துத் தருவது போன்ற நடவடிக்கைகள் எல்லாம் ஊதிய மாற்றத்தின் போது பிரச்னைகளை உருவாக்கிய நிகழ்வுகள் உள்ளதால் மாண்புமிகு முதல்வர்கள் அவர்கள் அகவிலைப்படி உயர்வை ஒன்றிய அரசு அறிவித்ததும் உடனடியாக உயர்த்தித் தர உத்தரவிடுவது அரசாங்கத்திற்கும் சுமை ஏற்றாமல் தடுக்கும்.

**சரண்விடுப்பு ஒப்புவிப்பு மறுஉத்தரவு வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி.**

சரண்விடுப்பு ஒப்புவிப்பு என்பது அரசு ஊழியர்கள் காலம்காலமாக தங்கள் விடுப்பை சரண் செய்து பெற்றுக்கொள்ளும் தொகையாகும். பண்டிகை காலங்களுக்கு, குழந்தைகளுக்கு பள்ளிக்கூட கட்டணங்களுக்கு, தொடர் மருத்துவ செலவுகளுக்கென்று அரசு ஊழியர்கள் பயன்படுத்திய இவ்வுரிமைத் தொகையை கொரோனாவை காரணம் காட்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்தி வைத்ததை அரசு ஊழியர்கள் ஏற்றுக்கொண்ட நிலையில் அதை இந்த ஆண்டிலிருந்து மறுஉத்தரவு வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியாகும். சரண்விடுப்பு அகவிலைப்படி போன்றவற்றையெல்லாம் நிறுத்தக்கூடாது என்று கொரோனா காலத்திலேயே எதிர்கட்சித் தலைவராக இருந்து நியாயம் பேசிய தமிழக முதல்வரே தற்போது அதை காலவரை குறிப்பிடாமல் நிறுத்தி வைத்துள்ளது எவ்வகையிலும் நியாயமானதில்லை.

**இவை தவிர...**

உறுதியளித்தபடி சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம் வழங்குதல், சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயித்தல், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிவரன்முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிடுதல், 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை உடனே வழங்குதல், தனியார்மய அரசாணைகளை இரத்து செய்தல், அரசுத்துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிடுதல், அரசுத்துறைகளில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிடுதல், இவை தவிர விப்ரோ வசம் உள்ள IFHRMS திட்டத்தில் உள்ள குளறுபடிகள் மற்றும் குறைகளை சரிசெய்து தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும், புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக விடுவிக்கப்படாத கொரோனா சிகிச்சைக்கான தொகையை உடனே விடுவிக்க வேண்டும். கொரோனா காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு நிபந்தனை இன்றி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் நிறைவேற்ற தொடர்ந்து போராடி வருகிறோம்.

ஆட்சிக்கு வந்ததும் நிச்சயம் பரிசீலித்து முடிவெடுப்பதாக தெரிவித்ததோடு அதுபற்றிய அறிவிப்புகள் இதுவரை எதுவும் வெளியிடப்படவில்லை. மேலும் எம்.ஆ.பி. செவிலியர்கள், ஊர்புற நூலகர்கள் உள்ளிட்ட மூன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில்

உள்ளவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. சொன்னதைச் செய்யும் முதல்வர் ஓராண்டாக செய்யாமல் இருப்பது தமிழக அரசின் மீது அதிருப்தியை ஊழியர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

கனிவான அணுகுமுறையும் வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டம், பறிக்கப்பட்ட சரண் விடுப்பூதியம், மறுக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வு, தற்காலிகப் பணியாளர்களின் பணி நிரந்தரம், தொகுப்பூதியம், காலமுறை ஊதியம் போன்றவற்றை வரையறுக்கப்பட்ட ஊதியமாக மாற்றுதல், தனியார் முகமைகள் மூலம் சொற்ப ஊதியத்தில் அரசுப்பணிகளை நிறைவேற்றும் மஜறமுறை தனியார் மயத்தை ஒழித்து குறைந்தபட்ச நியாயமான ஊதியங்களை உறுதிப்படுத்தும் அரசின் நேரடி நிரந்தர பணி நியமனம் போன்ற நியாயமான கோரிக்கைகளை மேலும் தாமதப்படுத்தாமல் உடனடியாக நிறைவேற்றும் உறுதிப்பாடான செயல்பாடுகளைத்தான் அரசு ஊழியர்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு கொடுக்கும் ஊதியத்தை செலவாகப் பார்க்காமல் மக்கள் நலனில் ஒரு அங்கமாக, சமூக நீதிக்கான ஒரு அம்சமாக, தமிழக இளைஞர்களின் எதிர்காலமாக பார்த்தால்தான் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்த மாநிலமாக இந்தியாவிற்கே வழிகாட்டும்.

அரசு ஊழியர்கள் ஏன் போராடுகிறார்கள்? யாருக்காக போராடுகிறார்கள்? இந்த நாட்டின் இளைஞர்கள் குறித்தும், அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை அரசாங்கங்கள் மறுத்து வருவதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும், இராணுவம் வரை நுழைந்துவிட்ட தனியார் மய குறித்தும், கார்ப்பரேட் மயத்தால் ஏற்பட்டுள்ள விலைவாசியேற்றம் பணவீக்கம் போன்றவற்றால் பொதுமக்கள் சந்தித்து வரும் இன்னல்கள் குறித்தும் இந்த ஒட்டுமொத்தமும் அரசு ஊழியர்களின் உரிமைகளோடு உணர்வுகளோடு எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன என்பது குறித்தும் விரிவான விவாததத்தையும் கருத்தாக்கத்தையும் ஏற்படுத்தி மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தமாதம் கருத்தரங்கங்கள் நடத்தினோம். இவற்றோடு அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு மேலும் காலதாமதப்படுத்தாமல் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து அழுத்தம் கொடுக்கவும் முதல்வரை நேரில் சந்தித்து நமக்கு கொடுத்த வாக்குறதிகளை நிறைவேற்றக் கோரியும் ஆகஸ்ட் 23ஆம் தேதி அணிதிரள இப்போதே தயாராவோம். கோட்டையை நோக்கி நீலக்கொடி ஏந்திச் சென்று கோரிக்கைகளை வென்றெடுப்போம். ●




# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

பதிவு எண் : 237/84

## கிருஷ்ணகிரி மாவட்ட மையம்

கிருஷ்ணகிரியில்...

# மாநில மகளிர் மாநாடு



"பெண் அரசு ஊழியர்களை அணி திரட்ட வேண்டும். அவர்களுடைய திறமைகளை வெளிக் கொணர வேண்டும். அவர்களை அறிவாற்றல் மிகுந்த தலைவர்களாக வார்த்தெடுக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சனைகளில் சிறப்பு கவனம் செலுத்தி அவைகளை நிறைவேற்றி வைக்க பாடுபட வேண்டும்"

**- தோழர். எம்.ஆர்.அப்பன்**

1989, அக்டோபர் 13 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில மகளிர் மாநாட்டு சிறப்புரையிலிருந்து....

அன்பிற்கினிய தோழர்களே!

வணக்கம். அடிப்படை பணிகளிலிருந்து அதிகாரமிக்க நிர்வாகப் பதவிகள் வரையிலும் பெண் அரசு ஊழியர்கள் தங்கள் கடமைகளை திறம்பட நிறைவேற்றி முன்னேறி வருகிறார்கள். அது மட்டுமின்றி, அறிவியல் ஆராய்ச்சி, விண்வெளி சாகசம், விளையாட்டு, இலக்கியம், காவல்துறை மற்றும் ராணுவம், சமூகப்பணிகள் என அனைத்து துறைகளிலும் பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். இத்தகைய மாற்றங்களும் முன்னேற்றங்களும் தானாக நிகழ்ந்துவிடவில்லை. முற்போக்கு இலட்சியங்களைக் கொண்ட அமைப்புகளின் தியாகத்தாலும், அர்ப்பணிப்பு மிக்க நடவடிக்கைகளினாலும் மட்டுமே சாதனைகள் சாத்தியமாயிற்று. ஆனாலும், இறுதி இலக்கை எட்ட இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளது...

அரசுப் பணியை மட்டுமே எடுத்துக் கொண்டாலும் இன்றைய நவீன தாராளமய சூழலில்...

சம வேலைக்கு - சம ஊதியம்
பணி பாதுகாப்பு
பணி சூழல் பாதுகாப்பு
ஓய்வூதிய பாதுகாப்பு

போன்ற அம்சங்கள் ஒட்டு மொத்த ஊழியர்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. குறிப்பாக பெண் அரசு ஊழியர்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

இச்சூழலில் பெண் அரசு ஊழியர்களை அணி திரட்டி அவர்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கங்களில் பங்கேற்கச் செய்து முன்னிலைப்படுத்துவதும், தலைமை பொறுப்புக்கு கொண்டு வருவதும்தான் பெண் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பதற்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த இயக்கத்தின் முன்னேற்றத்திற்கும் உந்து சக்தியாக அமையும்.

இத்தகைய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில், 2022, மே-07 அன்று சேலத்தில் நடைபெற்ற நமது சங்கத்தின் மாநில செயற்குழுவில் "மாநில மகளிர் மாநாட்டை" கிருட்டினகிரியில் நடத்துவதென முடிவாற்றப்பட்டது. தமிழகம் முழுவதிலிருந்தும் அனைத்து துறைகளில் உள்ள ஆயிரக்கணக்கான பெண் ஊழியர்கள் நமது மாவட்டத்தில் நடைபெற உள்ள மாநில மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு,

- அலுவலங்களிலும், களப்பணிகளிலும் பெண் ஊழியர்களுக்கு பாதுகாப்பு
- சத்துணவு, அங்கன்வாடி, வருவாய், கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்புற நூலகர்கள், MRB செவிலியர்கள், கணினி இயக்குநர் உள்ளிட்ட அனைவருக்கும் காலமுறை ஊதியம்
- அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டம்
- அரசுத் துறைகளில் உள்ள 4.50 லட்சம் காலிப்பணியிடங்களை வரையறுக்கப்பட்ட ஊதியத்தில் நிரப்புவது

உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் விவாதித்து முடிவெடுக்க உள்ள மாநில மகளிர் மாநாடு வெற்றிபெற அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**- வரவேற்பு குழு**

பிரகதி கிருஷ்ணகிரி. போன் : 04343 - 230887

TNGEA TNGEA TNGEA TNGEA

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com